www.tamilarangam.net

தமிழீழ மக்கள் கட்சியின் அரசியல் ஏடு

# தமிழீழம்

மக்களுக்கே அனைத்து அதிகாரங்களும்

[illegible] | இதழ் – 4

நம்ம ஊருக்குள்ள
நாம போறதுக்கு,
இந்த
நாசமாப்போவான்ட
செக்கிங்ல கால்கடுக்க
நிக்க வேண்டியிருக்கு
புள்ள.

# அபாய சமிக்ஞை!

சிறீலங்கா அரசாங்கத்தின் அமைச்சர் தொண்டமான் மீது, "பயங்கரவாதத்திற்கு எதிரான அமைப்பு" என்ற சிங்கள அமைப்பு வழக்கு தொடர்ந்திருக்கின்றது. தமிழீழத்திற்கு ஆதரவான கூட்டங்களில் அமைச்சர் தொண்டமான் கலந்து கொள்கிறார் என்பதும் தலைநகரில் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் வெற்றிகரமாக செயற்பட்டு வந்த ஒரு உயர் பொலீஸ் அதிகாரியின் இடமாற்றத்துக்கு காரணமாக அமைந்தார் என்பதும் அவர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளில் அடங்குகின்றன.

சமீப காலங்களில், சிங்கள தேசத்தின் மத்தியில் வேகமாக செல்வாக்கு பெற்று வருகின்ற பேரினவாத அமைப்புகளில் இந்த "பயங்கரவாதத்துக்கு எதிரான அமைப்பு" முக்கியமானது. முன்னைய பேரினவாத அமைப்புகளை போலன்றி, புதிதாய் உருவாகியுள்ள இந்த அமைப்புகள், ஏனைய தேசங்களின் உரிமைகளை மறுப்பதோடு மட்டும் தம்மை எல்லைப்படுத்தி கொள்ளவில்லை. கூடவே, சிங்களதேசத்தின் உரிமைகள் பறிக்கப்பட்டு வருகின்றன என்றும் பிரச்சாரப்படுத்துவதில் தமது கவனத்தை மையப்படுத்தியுள்ளன.

இது ஒரு முக்கியமான விடயம், அபாயகரமானதும் கூட. தமக்கென சொந்த அரசை கொண்டுள்ள சிங்கள மக்கள் மத்தியில், அவர்களின் உரிமைகள் பறிக்கப்பட்டு வருகின்றன என்ற கருத்து பரப்பப்படுவதனால், ஒரு புதியவகை உளவியல் அவர்களிடையே கட்டமைக்கப்பட்டு வருகின்றது. இந்த நாடு தமக்கே சொந்தம் என்ற ஆதிக்க உணர்வால் ஏற்கனவே பீடிக்கப்பட்டுள்ள சிங்களதேசம், இப்போது தமது உரிமைகள் பறிக்கப்பட்டு வருகின்றன என்ற கருத்தால் உலுக்கப்பட்டு, அதை நோக்கி ஈர்க்கப்பட்டுள்ளனர். இது சிறீலங்கா அரசின் இனவாத பண்பை மேலும் வலுப்படுத்துவதோடு, அது திட்டவட்டமான பாசிச வடிவம் பெறுவதற்கும் இட்டுச் செல்லக் கூடியது. ஜேர்மன் நாசிகள் இதற்கு சிறந்த உதாரணம்.

சிங்கள மக்களின் உரிமைகள் பறிக்கப்படுகின்றன என்ற கருத்தை ஆழநிலைப்படுத்துவதற்காக, இந்த இனவாத அமைப்புகள் தொடர்ச்சியான, திட்டமிட்ட செயற்பாடுகளில் இறங்கியுள்ளன. சிங்களமக்களின் உரிமைகள் பறிக்கப்பட்டதை விசாரிப்பதற்கான ஆணைக்குழு, யுத்தஆதரவு ஆர்பாட்டங்கள், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைமையத்தில் அதன் கொடியை எரித்தமை... என இப்போது தொண்டமான் மீதான வழக்கு என இப்போக்கு தொடர்கின்றது, தீவிரமடைகின்றது.

(தொடர்ச்சி 02இல்)

## மௌனத்தில் கரையும் மரணதண்டனை!

ராஜீவ் கொலையில் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு தண்டனை விதிக்கப்பட்டு விட்டது. நீதித்துறை என்று சொல்லப்படுவதன் சகல விதிமுறைகளுக்கும் முரணாக நடத்தப்பட்ட ஒரு கொலை வழக்கின் தீர்ப்பு எழுதப்பட்டு விட்டது. கொலையில் நேரடியாக சம்மந்தப்பட்டதாக நிரூபிக்கப்படாதவர்களுக்கும் மரணதண்டனை வழங்கப்பட முடியும் என்ற புதுமரபு சட்டப்புத்தகங்களில் பொறிக்கப்பட்டு விட்டது.

இத்தகைய ஒரு தீர்ப்பின் நியாய பண்பு குறித்து உரையாடி, அதன் பொறிக்குள் நாமும் அகப்பட வேண்டாம். பதிலாக, இதிலுள்ள, இன்னமும் கவனத்தில் கொள்ளப்படாத ஒரு விடயத்தில் கவனத்தை குவிப்போம். அதுதான் நளினி என்ற பெண்ணுக்கு வழங்கப்பட்டுள்ள மரணதண்டனை.

பெண்களுக்கு மரணதண்டனை விதிப்பது அனேகமாக வழக்கொழிந்து விட்ட ஒன்று. "கொடூரமானது" எனக்கருதப்படுகின்ற ஒரு குற்றத்தை புரிந்திருக்கின்ற போதிலும், அவர் ஒரு பெண் என்பதாலேயே மரணதண்டனைக்குள்ளாக்கப்படுவதிலிருந்து விடுபடுகின்ற மரபு வேரூன்றி வருகின்றது. இந்த மரபுகளையெல்லாம் புறமொதுக்கி, பெண்களை "தெய்வமாக" கருதுவதாக பெருமிதப்படுகின்ற நாட்டில், ஒரு பெண்ணுக்கு மரணதண்டனை வழங்கப்பட்டுள்ளது. இது இந்திய நீதித்துறையின் "வழுவா நெறிமுறை' என்று சட்டவல்லுனர்கள் வாதிடலாம். எனினும் எங்கள் கவனத்தை ஈர்ப்பது, இத்தண்டனை தொடர்பாக இந்திய பெண்கள் அமைப்புகள் மத்தியில் நிலவுகின்ற ஆழ்ந்த மௌனம்தான். ஏன் இந்த மௌனம்?! இந்திய பெண்ணுரிமை தளத்தில் ஒரு சிறு அதிர்வுதானும் இன்றுவரை தென்படாதது ஏன்?!

சர்வதேச சட்ட முறைமைகளெல்லாம் மீறப்பட்ட நிலையில் வீசாரிக்கப்பட்ட ஒரு வழக்கில் வழங்கப்பட்டுள்ள தவறான தீர்ப்பு என்ற வாதம் வேண்டாம், அல்லது கொலையுடன் நேரடியாக சம்மந்தப்பட்டிருந்ததாக நிருபிக்கப்படாத ஒருவருக்கு வழங்கப்பட்டுள்ள முறையற்ற தீர்ப்பு என்ற ஆவேஷம் கூட வேண்டாம், ஒரு பெண்ணுக்கு வழங்கப்பட்டிருக்கின்ற மரணதண்டனை என்ற அந்த உணர்ச்சிமிக்க, மரபழிக்கப்பட்ட புள்ளி எங்கள் மூளைகளில் அறையவில்லையா? இந்திய பெண்கள் அமைப்புகள், பெண்களின் உரிமைகளுக்காக மட்டுமன்றி, அனைத்து மனித உரிமைகளுக்காகவும் உறுதியுடன் போராடிவருபவை என்ற பெருமையை பெற்றிருக்கின்றன. நர்மதா அணை விவகாரம் தொடக்கம், ஆபாச சுவரொட்டி எதிர்ப்புவரை இந்திய பெண்களின் உரிமை போராட்டங்கள் கௌரவமிக்கவை, போற்றுதலுக்குரியவை, பெருமைக்குரிய இந்திய பெண்கள் அமைப்புக்களின் கவனத்தை, நளினி மீதான மரணதண்டனை இன்னமும் ஈர்க்காதிருப்பது ஏன்?

ஒரு பிரபலமான அரசியல் தலைவரின் கொலைக்கான தண்டனை இது என்றோ, அல்லது இத்தண்டனைக்கான எதிர்ப்பானது, வெகுஜன உணர்ச்சியை தூண்டக்

(தொடர்ச்சி 02இல்)

## மீண்டும் பேசுகிறார்கள்!

வர்த்தக மற்றும் தொழில்துறை பிரிவினரின் நிர்பந்தத்தின் பேரில், பிரதான இரண்டு சிங்கள அரசியல் கட்சிகளும் அரசியல் தீர்வு குறித்து பேச முன் வரப்போகின்றன. இதற்கான முன்னிபந்தனைகளும் வைக்கப்பட்டுள்ளன. எம்மீதான ஆக்கிரமிப்புப்போர் உக்கிரமடைந்திருக்கும் ஒரு சூழலில் மறுபடியும் ஒரு பரபரப்பான செய்தியாக இது உள்ளது. இதே போன்ற ஒரு அழுத்தத்தை இதே வர்த்தக மற்றும் தொழில்துறை பிரிவினர் ஒரிரு வருடங்களுக்கு முன்பும் கொடுத்திருந்ததை நாம் அறிவோம்.

பொருளாதார முன்னேற்றம் குறித்த சிங்கள அரசின் போலிப்புள்ளி விவரங்களையும் மேவி, தற்போதைய பொருளாதார வங்குரொத்து நிலையின் யதார்த்தததை பொருளாதார ஆய்வாளர்களும் சர்வதேச சமூகமும் அண்மைக்காலத்தில் அம்பலப்படுத்தியிருந்தன. தொடர்ச்சியாக விரிவடைந்து செல்லும் போர் காரணமாக உற்பத்திகளில் ஏற்பட்டு வந்த வீழ்ச்சிகளும், சகிக்க முடியாத நேர்முக மறைமுக யுத்த வரிகளும் மக்களின் வாங்கும் சக்தியை பெருமளவு குறைத்து விட்டுள்ளது. இந்த வகையில் உடமையாளர்களின் வருமான வீழ்ச்சியானது தொடர்ச்சியாக அதிகரித்து செல்வதை எவ்விதத்திலும் தடுக்க முடியாத நிலைமை நீடித்து வருகின்றது. இந்த வீழ்ச்சியானது அண்மைக்காலங்களில் உச்சம் கண்டுள்ளது. இப்படிப்பட்ட சூழலில்தான் வர்த்தக மற்றும் தொழில்துறைபிரிவினரின் "சமாதான தீர்விற்கான" கோரிக்கை சற்று அழுத்தமாக முன்வைக்கப்பட்டுள்ளது.

வருமான வீழ்ச்சியை எதிர்கொள்ளும் இந்த உடைமையாளர்களுக்கு, தமக்காக அரசியல் நடாத்தவென தாம் பணம் அள்ளி வழங்கும் பிரதான சிங்கள கட்சிகளை ஏதாவது அவசரமாக செய்யும்படி நெருக்குவதை தவிர வேறு வழி இருக்கவில்லை. இவர்களின் இந்த அழுத்தங்களை சிங்கள கட்சிகள் ஒரேயடியாக தட்டிக்கழித்து விட முடியாது. ஆனாலும் போக்கு காட்டுவது என்பது எப்போதும் தற்காலிகமான இலகு வழியாகும். அவர்கள் தமது அதிகாரங்களை மீளபெற்றுக்கொள்வதற்கான தேர்தல்கள் நெருங்குவதை இங்கு மனதில் கொள்வோம்.

அரசியல் தீர்வு குறித்து பேசுவதற்காக இருபெரும் சிங்கள சோவினிஸ்ட் கட்சிகளும் முன்னிபந்தனைகள் வைத்துள்ளன. இரு தரப்பின் முன்னிபந்தனைகளும் சாராம்சத்தில் ஒன்றுதான். இரண்டுமே நமது தேசிய இருப்பை நிராகரிக்கின்றது. ஒரு தரப்பு, ஒற்றை ஆட்சி என்ற வடிவில் அடக்குமறை ஆட்சி வடிவத்தை நேரடியாக முன்வைக்கின்றது. மறு தரப்பு அதே அடக்கு முறை வடிவத்தை "சனநாயக" இனிப்புத்தடவி, ஆட்சிக்கலைப்பு செய்யக்கூடிய பிராந்தியங்களின் ஒன்றியங்கள் என்ற வடிவில் முன்வைத்துள்ளது. அவ்வளவுதான். ஈழத்தமிழர்களையும் அடக்கப்படும் சகதேசங்களையும் சர்வதேச சமூகத்தையும் மீளவும் ஏமாற்ற முயலும் அதே உத்திதான்.

(தொடர்ச்சி 02இல்)

எமது இலட்சியம் சுதந்திர தமிழீழம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சிவப்பு ஜுலை

இலங்கைத்தீவு முழுவதும் வாழ்ந்த தமிழ்மக்கள் இரத்தம்சிந்திய மாதம் ஜுலை 83. நம் தேசத்தின் இரத்தத்தால் ஈரலிப்பானது தீவின் மண். இந்த நாட்கள் நம் தேசத்திற்கு கருப்பு நாட்கள் அல்ல! நம் தேசத்தின் சிவப்பு நாட்கள் இவை. நம் தேசம் தன்னுணர்வு பெற்று விழித்துக் கொண்ட நாட்கள் இவை. அந்த நாட்களைத்தான் இப்பொழுது நினைவு கூறுகின்றோம்.

எங்கள் உடல்கள் அழிக்கப்பட்டு நம் இரத்தம் உறிஞ்சப்பட்டு நமது உயிர் வாழும் அப்பட்டமாக மறுக்கப்பட்டு இம் மாதத்துடன் பதினாறு ஆண்டுகள் கழிந்து விட்டன. தமிழ்தேசம் அழிந்து விட்டதா? இல்லை! விழிப்புற்ற எந்த தேசமும் வரலாற்றில் அழிந்தது கிடையாது. அதை யாராலும் அழிக்கவும் முடியாது.

விழிப்புற்ற நமது தேசம் முன்னேறுகின்றது! தன் விடுதலை நோக்கி!

இதை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது.

தமிழீழ மக்களே!

ஏதோ உணர்ச்சி பொங்கிய சிங்கள தேசம் அழிக்கவில்லை எம்மை. அவ்வாறாயின் மன்னித்து மறந்துவிடலாம். ஆனால் சிங்களப் பேரினவாத அரசு திட்டமிட்டு எம் மீது போர் தொடுத்தது. சிறிலங்கா மண்ணில் எமக்கு உரிமை இல்லை என உறுதியாகக் கூறியது. அங்கிருந்து எமது மக்களை விரட்டியடித்தது. இதுமட்டுமா இலங்கைத் தீவிலிருந்தே எம்மை விரட்டியடித்து அல்லது அழித்து முழுத்தீவையும் தனதாக உரிமை கொண்டாடுவதே அதன் நோக்கம். அதன் இலட்சியமும் இதுவே.

இதற்காக அன்று தொடுத்த போரை இன்று வரை தொடருகின்றது.. இதன் மூலம் தமிழினத்தை சிறுக சிறுக அழிக்கின்றது. தமிழீழ மண்ணை சிறுக சிறுக ஆக்கிரமிக்கின்றது.

ஏதிரிகள், தமது நோக்கத்தில் தெளிவாகவும உறுதியாகவும் இருக்கின்றார்கள்.

எதிரி எம் மீது தொடுத்த போருக்கு எதிராக நாம் தொடுக்கும் போரின் நோக்கம் சிங்கள தேசத்தை அழிப்பதோ அல்லது சிறிலங்கா மண்ணை ஆக்கிரமிப்பதோ அல்ல. எதிரிக்கு எதிராக நாம் தொடுக்கின்ற போர் எம் தேசம் அழிந்துபோவதிலிருந்து பாதுகாப்பதற்கானது. எமது மண்ணை எதிரியின் ஆக்கிரமிப்பிலிருந்து தடுப்பதற்கானது. எமது மண்ணை ஆக்கிரமித்த எதிரியை [illegible] எமது தேசம் இறைமையுடனும் சுயநிர்ணைய உரிமையுடனும் தலைநிமிர்ந்து சர்வதேச சமூகத்தில் நாமும் ஒரு சமத்துவமான தேசமாக வாழ்வதற்கானதே நாம் தொடுக்கும் போர்.

நாம் தொடுக்கும் போர், எம் மீது தொடுக்கபட்ட போருக்கு எதிரானதே.

எம்தேசம் பெறும் விடுதலையே இந்தப் போரை நிறுத்தும்.

அன்றுதான் நாம் விரும்பும் உண்மையான சமாதானமும் பிறக்கும்.

நாம் பெறும் விடுதலை என்பது எதிரியுடன் சமரசம் செய்வதன் மூலமோ, எதிரியின் தவறுகளை சுட்டிக் காட்டுவதன் மூலமோ கிடைக்காது. .போதும்! போதும்! எதிரி எமக்கு செய்த அநியாயங்களைக்கூறி வாழ்ந்தது போதும். இவை மட்டும் எமக்கு விடுதலையைப் பெற்றுத் தரா்து. கோரிப் பெறுவதல்ல உண்மையான விடுதலை.

மக்கள் போராட்டமே உண்மையான விடுதலையைப் பெற்றுத்தரும்.

83 கருப்பு ஜுலை நம் தேசத்தின் கரி நாளல்ல! துக்க நாளுமல்லஇது. அந்த நாளில், நாம் கண்ட மண் எங்கும் சிவப்பு. எங்கள் உடல்களில் சிவப்பு. எங்கள் கண்களில் சிவப்பு. எங்கள் சிந்தனையில் சிவப்பு. எங்கள் எழுத்தில் சிவப்பு. எங்கள் பேச்சில் சிவப்பு.

இதுவா கரிநாள்! இல்லை! இல்லவே இல்லை! இந்த நாட்கள் சிவப்பு நாட்கள்!

ஆம்! நம் தேசம் விழித்துக் கொண்ட நாள். தன் விடுதலைக்காகப் போராட!

அன்று மடிந்த மக்கள் நம் தேசத்தின் விடுதலைக்கான வித்துக்கள்.

நம் தேசம் முன்னேறுகின்றது! தன் விடுதலை நோக்கி!

இது ஒரு சிவப்பு ஜுலை!

# சிறைகளின் அரசியல்!

1983 ஆடி இனஅழிப்பு என்றதும் நம் மனதைப்பிழிந்து நம்மை ஆவேசமுறச்செய்யும் நிகழ்வுகளில் ஒன்றாக வெலிக்கடை சிறைப் படுகொலைகள் எம்முன் தோன்றுகின்றன. இருண்ட "செல்களுக்குள்" தமிழ் அரசியல் கைதிகள் மீது நிகழ்த்தப்பட்ட இப்படுகொலைகள் சிஙகள அரசின் பேரினவாத முகத்தை உலகின் முன் வெளிச்சமிட்டுக காட்டின. அன்று சிங்கள அரசயந்திரத்தால் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட சிறைப் படுகொலைகள் இன்னமும் முற்றுப்பெறவில்லை. இன்று களுத்துறை சிறைப்படுகொலை வரை இக்கொடுரம் தொடர்ச்சியாக நீடித்துச்செல்கின்றது.

தமிழ் அரசியல்கைதிகளை பொறுத்தவரை, சிறிலங்காவின் சிறைச்சாலைகள் வெறுமனே தடுத்து வைக்கும் அறைகள் அல்ல. அவை எண்ணற்ற சொவினிஸ்ட் வகை இழிவுபடுத்தல்களும் அடக்குமுறைகளும் கணந்தோறும் மேற்கொள்ளப்படுகின்ற வெறிச்செயல்களின் மையங்களாகும் எந்தவித தங்குதடையுமின்றி தமிழர் என்ற ஒரே காரணத்திற்காகவே தலைகளையும் பிடுங்கக்கூடிய கொலைக்களங்களாகவே அமைகின்றன.

நாம் அடக்குமறைகளை சந்திக்கும் மற்றெல்லா தளங்களையும் போல கொடுமைகளையும் இழிவுபடுத்தல்களையும் சந்திக்கும் சிறைக்கூடங்களும் கூட போராட்டக்களங்களாகின்றன. அவ்வாறு ஆகவும் வேண்டும். இப்போராட்டங்கள் முறைப்படுத்தப்படும் போது அவை தாயகத்தில் நடைபெற்று வரும் விடுதலைப் போராட்டத்திற்கு பெரும் உந்து சக்தியாகின்றன. 80 களின் பின்னரைப்பகுதியில் சிறிலங்கா சிறைக்கூடங்களிலும் பூசா போன்ற திறந்த சிறைகளிலும் எமது அரசியல்கைதிகளினால் முன்னெடுக்கப்பட்ட போராட்டங்கள் நம் தேசத்தை எழுச்சியுறச் செய்தது மட்டுமன்றி சர்வதேச சமூகங்களின் அனுதாபத்தையும் ஈர்த்து தமிழீழ விடுதலைப்போராட்டத்தை உந்தித்தள்ளின.

புரட்சியிலும் விடுதலைப்போராட்டத்திலும் ஈடுபடும் மக்கள் மீது எதிரிகள் கொலீரமிழைத்தல் என்பது அன்றாடம் நடைபெறவே செய்கிறது. ஆனால் இந்த கொடுரங்களும் அட்டுழிங்களும் விடுதலைப்போராட்டத்தின் இலக்குகளுடன் இணைக்கப்பட்டு போராட்டத்தின் வீச்சை உச்சப்படுத்தி போராட்டமானது விரைந்த வெற்றிக்கு இட்டுச்செல்லப்படவேண்டும். இதன் மூலம்தான் இத்தகைய அக்கிரமங்களுக்கு நாம் முடிவு கட்ட முடியும். இத்தகைய கொடுரங்களுக்கு இலக்கானவர்களுக்கு நாம் செய்யும் புரட்சிகர கைமாறும் இதுதான். போராட்டத்தை தலைமை தாங்கும் தாபனங்களின் பிரதான கடமைகளில் இதுவும் ஒன்று.

மாறாக அன்றிலிருந்து இன்று வரை நடைபெற்று வரும் இத்தகைய சிறைக்கூடவதைகளையும் கூட்டுப்படுகொலைகளையும் சம்பவங்களாக்கி கண்ணீர் சிந்தி, அஞ்சலி செலுத்தி சுவரொட்டிகள் ஒட்டுவதுடன் மட்டும் நின்று விடுவது எதிரிகளின் கொடுமைகளுக்கு இல்க்கானவர்களுக்கு நாம் தரும் ஒருவகை அவமானங்களாகும். எமது கண்ணீர் அஞ்சலிக்காகவா அவர்கள் தம்மை பலி தந்தார்கள்? நம்மவர்களின் இன்னுயிர்கள் பலிகொள்ளப்பட்டதற்கு பின்னுள்ள அரசியலை பற்றி நின்று, அதன் இலக்குகளை நிறைவு செய்வதுதான் நமது விடாப்பிடியான அரசியல்கடமையாகும். இந்த திசையில் நாம் விரைந்து முன்னேறியாக வேண்டும எமது இலட்சியம் நிறைவேறும்வரை-சுதந்திர தமிழீழ குடியரசை உருவாக்கும் வரை நமது போராட்டம் தொடரத்தான் போகின்றது. சிறைக்கூடங்களும் வதைமுகாம்களும் நிரம்பத்தான் போகின்றன. பூசா போன்ற திறந்த சிறைகள் மென்மேலும் உருவாகத்தான் போகின்றன. சிறைக்கூட அரசியலை எமது பிரதான அரசியலுடன் இணைத்து சர்வதேச அரசியலாக்கி எமது பிரதான போராட்டத்தை பலப்படுத்துவோம். சிறைப்பிரச்சனையை எமது தேசத்தின் பிரச்சனையாககுவோம். இவ்வாறு செய்வதுதான், சிறைகளிலும் வதை முகாம்களிலும் தமது உயிர்கள் பறிக்கப்பட்ட எமது மக்களுக்கும் போராளிகளுக்கும் தேசத்தின் பெயரில் நாம் செலுத்துகின்ற உண்மையான உயரிய அஞ்சலியாக அமையும்.

## மீண்டும் பேசுகிறார்கள்.. (1ஆம் பக்க தொடர்ச்சி)

ஈழத்தமிழரின் இறைமையையும் சுயநிர்ணய உரிமையையும் தீர்மானிக்க நமது எதிரிகள், எம்மீதான அடக்குமுறைக்கான மூல கர்த்தாக்கள் முன்னிபந்தனைகளுடன் உட்காரப்போகின்றார்கள். இடைத்தரகராக எந்த பிரித்தானிய எஜமானர்களின் துணை அமைச்சர் வரப்போகின்றார் என்பது தெரியவில்லை. இரு தரப்பும் இதற்கு முன்னர் கையொப்பம் இட்டிருந்த பழைய கடிதத்தை ஆவணக்கோவையில் இருந்து தூசி தட்டி எடுக்கவும் கூடும். இந்த நிகழ்வுகள் எல்லாம் தினசரிப்பத்திரிகைகளுக்கும் பிரபல ஆய்வாளர்களுக்கும் அவ்வப்போது தீனி போடும் செய்திகளாக இருந்து விட்டுப்போகட்டும். நமது இலக்கில் நாம் தங்கு தடையின்றி முன்னேறிச்செல்வோம்.

## மௌனத்தில் கரையும்... (1ஆம் பக்க தொடர்ச்சி)

கூடியது என்றோ காரணங்கள் முன்வைக்கப்படலாம். எனினும் இவை எதுவும், ஒரு பெண்ணின் உயிர்வாழும் உரிமை முற்றாக மீறப்பட்டிருக்கின்றது என்ற உண்மையை மறுத்து விடாது. மறுக்கப்பட்டுள்ள உரிமை குறித்த ஆவேஷம் எத்துனை தார்மீக் முக்கியத்துவமுடையதோ, அதே அளவுக்கு, பெறப்பட்ட உரிமைகள் பறிக்கப்படுவதால் எழுகின்ற ஆவேஷமும் தார்மீகத்தன்மை கொண்டது.

## அபாய சமிக்ஞை... (1ஆம் பக்க தொடர்ச்சி)

இவை வெறுமனே சுட்டிக்காட்டலுக்குரிய விடயங்கள் அல்ல. மாறாக, பாசிச வடிவம் நோக்கி நகர்கின்ற சிறீலங்கா அரசின் ஆக்கிரமிப்பிலிருந்தும் இன அழிப்புகளிலிருந்தும் இங்குள்ள ஏனைய தேசங்கள் தம்மை பாதுகாத்து கொள்ள வேண்டும் என்பதை அவசியமாக்கியுள்ள "உயிருள்ள" உதாரணங்கள் இவை. மீண்டும் மீண்டும் துலக்கமாக காட்டப்படுகின்ற இத்தகைய அபாய சமிக்ஞையை உதாசீனப்படுத்தி விட்டு, சிறீலங்கா அரசின் ஒரு அங்கமாக தம்மை நிலைப்படுத்த விரும்புகின்ற தமிழ், முஸ்லிம், மலையக அரசியல்வாதிகள், தமது மக்களை மட்டுமல்ல, தமது தலைகளையும் கொலைமேடையில் வைத்திருக்கிறார்கள் என்பதை புரிந்து கொள்வதற்கான காலம் ஏற்கனவே கடந்து விட்டது. இனி, தாமதிக்கும் ஒவ்வொரு கணமும், இன்னும் மோசமான அழிவை நோக்கிய நர்வு என்பதை இத்தேசங்கள் உணர்ந்து செயற்பட வேண்டிய தருணம் இது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழீழ மக்கள் கட்சி
# அரசியல் திட்டம்

அ. ஐரோப்பியரின் வருகைக்கு முன்னர் இலங்கையின் வட பகுதியில் தமிழ் மன்னர்களின் கீழ் யாழ்பாண இராட்சியமும், வன்னி உட்பட சில சிற்றரசுகளும் காணப்பட்டன.

இவற்றையும் இலங்கையின் மத்திய பகுதி மற்றும் தென்பகுதியில் சிங்கள மன்னர்களின் கீழ் இருந்த இராச்சியங்களையும் பிரித்தானிய ஆக்கிரமிப்பாளர்கள் பலவந்தமாக இணைத்து தனியரசுக் கட்டமைப்பினுள் கொண்டு வந்தனர்.

இத்தகைய அரசுக்கட்டமைப்பினுள் பல்வேறு சமூக, பொருளாதார, அரசியல், கலாச்சார மாற்றங்கள் வேகமாக நடந்தேறின. இப் புதிய சூழலில் மக்கள் பிரிவினரிடையே தனித்துவமான சமூக உருவாக்கங்கள் நடைபெற்று நான்கு தனித்தனியான இனங்கள் நிலைபெற்றன.

ஆ. 1948 இல் பிரித்தானிய ஆக்கிரமிப்பாளர்கள் இலங்கையை விட்டு வெளியேறிய போது இலங்கையில் சிங்களவர், ஈழத் தமிழர், மலையகத்தமிழர், முஸ்லீம்கள் எனும் நான்கு இனங்களும் பறங்கியர், மலாயர் போன்ற சில தேசிய சிறுபான்மை இனங்களும் காணப்பட்டன. அரசியல் அதிகாரமானது சிங்கள தலைமையிடம் ஒப்படைக்கப்பட்டது. பல இன, மொழி, மத, கலாச்சார வேறுபாடுகளைக் கொண்ட மக்கட் பிரிவினரை சமத்துவமாக ஒன்றிணைத்து அவர்களை "இலங்கையர்" என்ற ஒரு தேசமாக கட்டமைக்கும் அரசியல் கடமை இத்தலைமைக்கு இருந்தது.

கொலனித்துவ காலகட்டத்திலேயே அரசியல் ரீதியில் சிங்கள மக்களை ஒன்றிணைத்து விட்ட சிங்களத் தலைமையானது, அரசியல் அதிகாரம் தமது கரங்களுக்கு வந்துவிட்ட நிலையில் தொடர்ச்சியாக, ஏனைய இனங்களின் உரிமைகளை பறித்து, சிங்கள மக்களை மட்டும் சிங்கள தேசமாக கட்டமைத்தது. அதே சமயம் இந்த அடக்குமுறைகளுக்கு எதிரான தொடர்ச்சியான போராட்டங்களினூடாக ஏனைய இனங்களான ஈழத்தமிழர், முஸ்லீம்கள், மலையகத்தமிழர் போன்றோரும் தனித்தனி தேசங்களாக உருப்பெற்றனர்.

இன்று சிங்களவர், ஈழத்தமிழர், முஸ்லீம்கள், மலையகத்தமிழர் என திட்டவட்டமான நான்கு தேசங்கள் யதார்த்தத்தில் நிலவுகின்றன. அரசியல் அதிகாரத்தை தனதாக்கிக் கொண்ட பேரினவாத ஆதிக்கக் கூட்டானது, ஏனைய தேசங்களின் மீது தீவிர அடக்குமுறைகளை தொடர்ச்சியாக கட்டவிழ்த்து விட்டிருக்கின்றது. இவ்வாறாக ஏற்கனவே சமூக அளவில் நடந்தேறிவிட்ட பிளவானது அரசியல் ரீதியாக முற்றுப் பெறாமையே இன்றைய தேசிய ஒடுக்குமுறையின் சாராம்சமாகும்.

ஈழத்தமிழராகிய நாம் தனியான தேசமாகும். தமிழீழம் எமது பாரம்பரியத் தாயகமாகும். சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் எமக்கென தனியான ஒரு அரசை அமைப்பதே, தேசிய அடக்குமுறைக்கு ஒரே தீர்வாகும். எனவே "தமிழீழ ஜனநாயக்குடியரசை" நிறுவுவதே எமது குறைந்தபட்சத் திட்டம் என எமது கட்சி பிரகடனம் செய்கிறது.

இ. இது நவகொலனித்துவ சகாப்தமாகும். இந்த சகாப்தத்தில், ஏகாதிபத்திய அரசுகளும், ஜப்பான் போன்ற நவகொலனித்துவ ஆதிக்க அரசுகளும் அரசியல் ரீதியில் மட்டுமன்றி, தொழில் நுட்பம், கடனுதவி, வர்த்தக ஒப்பந்தம், சேவைகள்துறை போன்றவற்றைப் பயன்படுத்தி மூன்றாம் உலக நாடுகளை சுரண்டியும், கட்டுப்படுத்தியும் வருகின்றன. இதனால் பல நாடுகள் போராடிப் பெற்ற "அரசியல் சுதந்திரம்" ஆனது எதார்த்தத்தில் எவ்வித அர்த்தமும் அற்றதாகியுள்ளது. இத்தகைய சூழலில் எமது தேசிய விடுதலைப் போராட்டமானது, ஏகாதிபத்திய எதிர்ப்பையும் நவகொலனித்துவ ஆதிக்க எதிர்ப்பையும், பலமான சுயசார்பு பொருளாதாரத்தையும் கொண்டிருக்கும். இதன் மூலமே எமது சுதந்திரத்தையும் இறைமையையும் நாம் உத்தரவாதப்படுத்த முடியும்.

ஈ. அந்நிய எஜமானர்களுக்கு மாற்றாக, சுதேச எஜமானர்களை ஆட்சியில் அமர்த்துவது தேசிய விடுதலை ஆகாது. மாறாக, அடக்கப்படுகின்ற தேசமானது விரிந்தளவில் ஜனநாயக உரிமைகளைப் பெறுவதுடன், பொருளாதாரச் சுரண்டல், ஆணாதிக்க, சாதீய அடக்குமுறைகள், மற்றும் பல தரப்பட்ட சமூக-பொருளாதார-அரசியல் கலாச்சார அடக்குமுறைகளிலிருந்தும் தன்னை விடுவித்துக் கொள்ளும் போதே, அடையப்படும் தேசிய விடுதலையானது அர்த்தமுள்ளதாக இருக்கும். ஈழத்தமிழரில் பெரும்பான்மையினராக அமையும் அடக்கப்படுகின்ற-விளிம்புநிலை மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் எமது கட்சியானது, ஏகாதிபத்திய நவகொலனித்துவ பிடியிலிருந்தும், ஏனைய சமூக, பொருளாதார, அரசியல் கலாச்சார அடக்குமுறைகளிலிருந்தும் விடுதலை அடைவதையும் உள்ளடக்கிய ஒரு சோசலிச சமுதாயத்தை படைப்பதை உயர்ந்தபட்ச திட்டமாக பிரகடனம் செய்கின்றது.

உ. ஈழத்தமிழரது சமூக உருவாக்கத்தை பொறுத்தவரை, கொழும்பை மையமாகக்கொண்ட தரகு முதலாளி வர்க்கமும், உயர் அதிகார வர்க்க மேட்டுக் குடி பிரிவினரும் தவிர்ந்த ஏனைய வர்க்கங்கள், சமூக சக்திகள் அனைத்தும் ஈழத்தமிழரது முழுமையான தேசிய விடுதலையை வேண்டி நிற்கின்றன. இச்சக்திகளை இணைத்துக் கொள்ளும் விதத்தில் எமது குறைந்தபட்ச திட்டமானது இச்சக்திகளின் அரசியல், சமூக, பொருளாதார, கலாச்சார அபிலாசைகளையும் கருத்திற் கொண்டதாக அமையும்.

ஈழத் தமிழரது சமூக உருவாக்கத்தினுள் பொருளாதாரம், தொழில்நுட்பம், அரசியல், ஆன்மீகம் போன்றவை முழுத் தேசத்தினதும் பொருள்வகை தேவைகளை பூர்த்தி செய்யக் கூடிய அளவிலும், அவர்கள் மத்தியில் உயர் ஜனநாயக விழுமியங்களை உருவாக்கக் கூடிய விதத்திலும் வளர்ச்சி பெறவில்லை. எனவே ஒரு சோசலிச சமுதாயமாக மாறுவதற்கு முன்பாக அதற்கு அவசியமான பொருள்வகை மற்றும் ஆன்மீக வகைப்பட்ட வளங்களை வளர்த்துக் கொள்ளும் ஒரு கட்டத்தினூடாக ஈழத்தமிழர் பயணம் செய்ய வேண்டியுள்ளது. இதனால், எமது தேசிய விடுதலையானது சாரம்சத்தில் ஒரு ஜனநாயகப் புரட்சியாகவே இருக்கும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எமது தேசிய விடுதலையானது ஒரு ஜனநாயக புரட்சியாக இருப்பதனால், இந்தப் புரட்சியினால் கைகூடும் சமூக, பொருளாதார, அரசியல், கலாச்சார மாற்றங்களினது அளவும் மட்டுப்படுத்தப்பட்டதாகவே இருக்கும். எனினும், தேசிய விடுதலையானது தேசிய அடக்குமுறைக்கு முடிவு கட்டுகிறது. விரிவான ஜனநாயகத்தை மக்கள் திரளுக்குப் பெற்றுத் தருகிறது. மேலும், இப்புரட்சியானது எமது சமுகத்தில் தற்போது நியமமாகப் கொள்ளப்படும் பல்வேறு ஜனநாயக விரோத, அதிகாரத்துவ, அடக்குமுறை வடிவங்களுக்கு முடிவு கட்டுகிறது. இதன் காரணமாக எமது சமுதாயத்தில் நிலவும் அடிப்படையான வர்க்க, சாதீய, பால்நிலை, பிரதேச முரண்பாடுகள் பகிரங்கமாக வெளிப்படுவதும், இந்த முரண்பட்ட சக்திகள் தமக்கிடையில் மோதி, இம்முரண்பாடுகளுக்கு தீர்வு காண்பதும் சாத்தியப்படும். எனவே ஜனநாயகப் புரட்சிக் காலகட்டம் என்பது முரண்பட்ட வர்க்க, சமூக, சக்திகளுக்கிடையேயான போராட்டத்திற்கான காலகட்டமாகும். இந்தக் காலகட்டத்தில் சுரண்டப்படும், அடக்கப்படும் மக்களுடன் இணைந்து அம் மக்களை அணிதிரட்டி, அரசியல் விழிப்புணர்வூட்டி, அமைப்பாக்கி இப்போராட்டத்திற்கு தலைமை தாங்குவது எமது கட்சியின் கடமையாகும். இப்போராட்டத்தின் ஊடாகவே ஈழத்தமிழர் சோசலிச சமுதாயத்தைப் படைப்பர்.

ஊ. ஈழத்தமிழரது இன்றைய சமூக எதார்த்தத்த நிலையில் "புரட்சிகரக் கட்சி" என்பது, வரலாற்றில் மிகவும் முன்னேறிய கோட்பாடாகிய மார்க்சியத்தால் வழிநடாத்தப்படுகின்றதும், அடக்கப்படுகின்ற மற்றும் விளிம்புநிலை மக்களது நலன்களை முதன்மையாகக் கொண்டதும், அடக்கப்படும்- விளிம்புநிலை - ஜனநாயக மக்கட்பிரிவினால் தலைமை தாங்கப்படுவதுமான கட்சி என்றே அர்த்தப்படும்.

எமது கட்சியானது ஏனைய தேசபக்த வர்க்கங்கள், சமூக சக்திகள் போன்றவற்றுடனும், இவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்புகளுடனும் ஒரு விரிவான ஐக்கிய முன்னணியை நிறுவி, ஈழத்தமிழர் தமது தேசிய விடுதலையை வென்றெடுக்க உறுதியுடன் போராடும்.

## எ. ஈழத் தமிழர் மத்தியிலுள்ள அகவொடுக்குமுறைகள்

### 1. ஆணாதிக்கம்

பல்வேறு குறிப்பான சமுதாயங்களின் வரலாற்றில் முதல் அடக்குமுறை பெண்கள் மீதான அடக்குமுறையாகும். இவ்அடக்குமுறையானது ஏனைய வர்க்க அடக்குமுறைகளுக்கு முன்பே தோன்றி அடுத்து வந்த பல தரப்பட்ட சமூக அமைப்புகளிலும் நீடித்து, இன்றுவரை நிலைத்து நிற்கும் ஓர் தனித்துவமான அடக்குமுறை வடிவமாகும். இதுவரை காலமும் சமுதாயத்தில் நடைபெற்ற புரட்சிகள், ஆதிக்க வடிவங்கள் பலவற்றிற்கு முடிவு கட்டிய போதிலும் அப்புரட்சிகளையும் தாண்டி புதுப்புது வடிவங்கள் பெற்று நிலைத்து நிற்கும் தன்மை இந்த ஆணாதிக்க முறைமைக்கு உண்டு. குறிப்பிட்ட ஒரு சமுதாயத்தில் நிலவும் ஏனைய அடக்குமுறை வடிவங்களுக்கு ஏற்ற வகையில் ஆணாதிக்க அடக்குமுறையானது தன்னை தகவமைத்துக் கொண்டு, அவ்வடக்குமுறைகளுடன் இணைந்து தானும் பலம் பெற்று வந்துள்ளமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். எமது சமூகத்தில் சட்ட, சமூக, பொருளதார, பாலியல் மற்றும் சித்தாந்த ரீதியாக மட்டுமல்ல, தமிழ் சமூகத்தின் குறிப்பான பிற்போக்கு கலாச்சார மற்றும் அம்சங்களினாலும் பெண்கள் அடக்கப்படுகின்றனர். ஆணாதிக்க முறைமையானது நடப்பிலுள்ள சுரண்டல் அமைப்புகளுடனும் ஏனைய அடக்குமுறைகளுடனும் நெருக்கமான உறவுகளைக் கொண்டுள்ளது. இந்த வகையில் தேசிய விடுதலையோ, வர்க்க விடுதலையோ தன்னளவில் ஆணாதிக்க முறைமையை முடிவுக்கு கொண்டு வந்துவிட மாட்டாது. எனவே ஆணாதிக்க முறைமையின் குறிப்பான வடிவங்களை இனங்கண்டு அவற்றிற்கு எதிராக குறிப்பான போராட்டங்களை பெண்களே தலைமை தாங்கி நடாத்த வேண்டும். இப் போராட்டங்களுடன் எமது கட்சி தன்னை இணைத்துக் கொள்வதோடு தன்னளவிலும் ஆணாதிக்க அடக்குமுறைமைக்கு எதிராக உறுதியுடன் போராடும். ஆணாதிக்கமானது சமுதாயத்தின் ஏனைய அடக்குமுறை வடிவங்களுடன் பின்னிப் பிணைந்து ஒன்றையொன்று பலப்படுத்திக் கொண்டிருப்பதால், இதற்கெதிரான போராட்டமானது தேசிய, வர்க்க, சாதிய அடக்குமுறைகளுக்கு எதிரான போராட்டங்களுடன் இணைக்கப்படுவதும் அவசியமாகும்.

### 2. சாதியம்

சாதியம் என்பது பொதுவாகவே மரபான தொழில்களை அடிப்படையாகக் கொண்டதும் பிறப்பினால் ஏற்றத்தாழ்வு கற்பிக்கின்றதும் பிராமணருக்கு வெறுமனே சடங்கு ரீதியாக உயர்ந்த அந்தஸ்தையும் வேளாளர் தலைமையிலான அதிகாரப்படி நிலையை வலியுறுத்துவதுமான ஒரு சமூக ஒழுங்கமைப்பாகும். "தூய்மை" ,"தீட்டு" என்ற வேதாந்தக் கருத்தாக்கங்கள் சாதியத்திற்கான சித்தாந்த நியாயப்பாட்டை வழங்குகின்றன. ஆதிக்க சக்திகளும் இவ்வாதிக்க சித்தாந்தமும் தமது இருப்பைப் பேணுவதற்காக பல்வேறு அடக்குமுறை வழிமுறைகளைப் பேணி வருகின்றன.

இப்படியாக ஒரு சமூகமானது தனக்குள் ஒரு பிரிவினரை தீண்டத்தகாதவர்களாகக் கருதி அடக்குவது, சுரண்டுவது, இழிவுபடுத்துவது, அன்றாடம் அவமானப்படுத்துவது என்பது அடிப்படை மனித உரிமைகளுக்கும், ஜனநாயக நடைமுறைகளுக்கும் முரணானது. சாதியமானது ஒருவிதத்தில் உற்பத்தி உறவாகவும், அதிகாரப்படிநிலை வரிசையாகவும், சித்தாந்தமாகவும் இன்னும் பல விதத்திலும் ஒரு சிக்கலான முறையில் ஒழுங்கமைக்கப்பட்டிருப்பதனால் சாதியத்தை வெறுமனே பொருளாதார மாற்றங்களோ அல்லது தேசிய விடுதலையோ தன்னளவில் தீர்த்துவிடாது. சாதி என்ற பெயரில் அடக்கப்படும் மக்களின் குறிப்பானதும் தனித்துவமானதுமான போராட்டங்கள் சாதீய அடக்குமுறையை முடிவு கட்டுவதில் தீர்க்கமானவை.

தன்னுள் ஒரு பகுதியாக இருக்கும் சமூகப் பிரிவினது அடிப்படை மனித உரிமைகள், ஜனநாயக உரிமைகளை மறுத்துக் கொண்டிருக்கும் ஒரு தேசமானது, தன் மீதான இன்னொரு தேசத்தின் அடக்குமுறைக்கு எதிராகக் குரலெழுப்பும் தார்மீகப் பலத்தை, தன்னளவில் இழந்து விடுகிறது. இந்த வகையில் சாதீய அடக்குமுறையின் தொடர்ச்சியானது ஈழத்தமிழரது தேசியவிடுதலைப் போராட்டத்தை பலவீனப்படுத்தும் ஒரு அம்சமாகும். எனவே இவ்வடக்குமுறைகளை ஒழிப்பதற்கு முழுத்தேசமும் ஐக்கியப்பட்டு போராட வேண்டும். இத்தகைய போராட்டத்துடன் எமது கட்சி தன்னை இணைத்துக் கொள்வதொடு, தன்னளவிலும் சாதிய அடக்குமுறைமைக்கு எதிராக உறுதியுடன் போராடும்.

தேசிய விடுதலைப் போராட்டத்தில் பிரதான சக்திகளில் ஒன்றாக அமைகின்ற சாதியென்றபெயரில் அடக்கப்படும் பிரிவினருக்கு எதிரான, அனைத்துவகை அடக்குமுறைகளுக்கும் எதிராக எமது கட்சி தொடர்ச்சியாகப் போராடும்.

### 3. பிரதேசவாதம்

ஈழத்தமிழர் மத்தியில் நீண்ட காலமாக தேசிய ஐக்கியத்தை சிதைத்து வரும் ஒரு போக்கு பிரதேசவாதமாகும். யாழ் மையவாதமானது இதன் மிகக் குறிப்பான ஒரு வெளிப்பாடாகும். தமிழீழ தாயகத்திலுள்ள யாழ்பாணம் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களைத் தாழ்வாக கருதுவதும், அவர்கள் மீது ஆதிக்கம் செலுத்துவதும் இதன் வெளிப்பாடாகும். இவ்வாதிக்கப் போக்கிற்கு எதிர்விளைவாக கடந்த காலத்தில் வன்னியிலும் தென் தமிழீழத்திலும் தோன்றியதே "யாழ் அகற்று சங்கம்" போன்ற அமைப்புகளாகும். ஈழத் தமிழர் மத்தியிலிருந்த இந்த முரண்பாட்டை சிங்கள அரசும், அதன் தமிழ் விசுவாசிகளும் அவ்வப்போது பயன்படுத்த முனைந்துள்ளனர்.

ஈழத் தமிழரின் தேசிய ஒற்றுமைக்கு கேடு விளைவிக்கின்ற இந்த ஆதிக்கப் போக்கானது குறிப்பாக பின்வருமாறு வெளிப்படுகின்றது. ஈழத் தமிழரின் வரலாறு பற்றிப் பேசும்போது எப்போதும் யாழ் இராட்சிய வரலாறு பற்றி மட்டும் பேசிவிட்டு, வன்னி இராச்சிய தமிழர் வரலாறு , மற்றும் ஏனைய தமிழ் பிரதேச மக்களின் வரலாறுகளை தவிர்த்து விடுவது: புலமைத்துவ மரபுகளை பேசும் போது யாழ், சைவ, வேளாள தமிழரின் பங்களிப்பை மட்டும் உயர்த்துவது, ஏனைய தமிழரின் பங்களிப்பை புறம் தள்ளுவது: தேசிய ஒடுக்குமுறைகளின் விளைவுகளை யாழ் தமிழரின் பிரச்சனையாக குறுக்கி இங்கும் சர்வதேச அளவிலும் முனைப்பாக காட்டுவது: வன்னி மற்றும் தென் தமிழீழ தமிழரின் அரசியல் பிரதிநிதிகளை தமிழ் கட்சிகளிலுள்ள யாழ் தலைமையே நிர்ணயிப்பது.

மேலும் இந்த ஆதிக்கப் போக்கானது விடுதலைப் போராட்ட அமைப்புகளிலும் தொடர்ச்சியாக நிலவி வந்துள்ளது. அமைப்பு வளங்களை சமத்துவமாக பங்கிடாமை: மத்திய தமிழீழ, தென் தமிழீழப் பிரதேசங்களை வெறுமனே ஆளணி திரட்டுவதற்குரியதாக மட்டும் கருதிக்கொள்வது: சக பிரதேச மக்களின் பாதுகாப்பையும் வளங்களையும் விலையாக கொடுத்து யாழ் பாதுகாப்பை உத்தரவாதப்படுத்துவது போன்றவை இவற்றுள் அடங்கும்.

இந்த யாழ் ஆதிக்கப் போக்கினால் பாதிப்புற்ற சகபிரதேச தமிழர் இவற்றுக்கு எதிராக குரலெழுப்பும்போது அது பிரதேசவாதத்தை கிளப்புவதாக உடனே முத்திரை குத்தப்பட்டு அடக்கப்படுகிறது.

பிரதேசவாத உணர்வானது ஒரு குறிப்பிட்ட அளவிற்கு யாழ் தவிர்ந்த ஏனைய தமிழீழ பிரதேசத்திலுள்ள ஈழத் தமிழர்களையும் தமக்குள் பிளவுபடுத்த காரணமாகிறது.

ஒட்டுமொத்தத்தில் இவையாவும் ஈழத் தமிழர் பலமான ஒரு தேசமாக எழுந்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நின்று தேசிய அடக்குமுறைக்கு எதிராக தீவிர போராட்டத்தை நடாத்த தடையாக அமைகின்றன. எனவே யாழ் மையவாதம் உட்பட ஈழத்தமிழர் மத்தியில் நிலவும் அனைத்து வகைப்பட்ட பிரதேசவாதங்களுக்கும் ஐதீகங்களுக்கும் அசமத்துவங்களுக்கும் பாகுபாடுகளுக்கும் எதிராக எமது கட்சி கருத்து ரீதியிலும் நடைமுறை வடிவிலும் தொடர்ச்சியாக போராடும். எமது தேசிய விடுதலை போராட்ட இயக்கத்திலும், எமது கட்சியிலும் அதன் தலைமையிலும் தமிழீழத்திலுள்ள அனைத்து தமிழ் மக்களும் முறையாக பிரதிநிதித்துவப்படுத்தப்படுவதை எமது கட்சி உத்தரவாதப்படுத்தும்.

அருந்ததியர்

தமிழீழத்தில்வாழ்கின்ற அருந்ததியர் சமூகமானது சாதிய, சமூக, பொருளாதார, அரசியல் மற்றும் கலாச்சார ரீதியில் மிகவும் மோசமாக அடக்கப்பட்டு வருகிறார்கள். எமது கட்சியானது, இவர்கள் மீதான அடக்குமுறைகளுக்கு எதிராக உறுதியுடன் போராடும்.

சிறிலங்காவில் உள்ள அருந்ததியர் தமிழீழத்தில் வாழ விரும்பினால் அவர்களுக்கும் தமிழீழம் தாயகமாகும். தமிழீழப் பிரசைகளுக்கு உரிய அனைத்து உரிமைகளும் இவர்களுக்கு உண்டு.

பழங்குடிகள்

தமிழீழத்தில் வாழ்கின்ற பழங்குடிகளான வேடுவர்கள், குறவர்கள் போன்றோரின் வாழ்க்கை முறை, நலன்கள், இயற்கை வளங்கள் மீதான அவர்களின் உரிமைகள் என்பவற்றை பாதுகாப்பதற்காக எமது கட்சி உறுதியுடன் போராடும்.

## ஏ. தமிழீழ விடுதலைப் போராட்டமும் அடக்கப்படுகின்ற சக தேசங்களும்

முஸ்லீம் மக்கள்

முஸ்லீம் மக்கள் சிறிலங்காவில் பரவலாக சிதறிய நிலையிலும், தமிழீழத்தின் குறிப்பிட்ட பகுதிகளில் செறிவாகவும் வாழ்கின்றனர். மொழி, மதம், சிங்கள இனவாத அடக்குமுறைக்கு உட்படுவது போன்றவற்றில் சிறிலங்காவிலும், தமிழீழத்திலும் வாழும் முஸ்லீம் மக்களுக்கிடையில் பொதுமை காணப்பட்ட போதிலும், ஏனைய சமூக பொருளாதார, அரசியல் அம்சங்களில் இவர்கள் தனித்துவமான பண்புகளைக் கொண்டுள்ளனர்.

தமிழீழமானது பாரம்பரியமாக இங்கு வாழ்ந்து வரும் ஈழத்தமிழருக்கும், முஸ்லீம் மக்களுக்கும் பொதுவான தாயகமாகும். இங்குள்ள முஸ்லீம் மக்கள் தம்மைத் தனித்துவமான சமூகமாக இனங்காண்கின்றனர், அத்துடன், தமிழ் பேரினவாத போக்கிற்கு எதிராகவும் போராட வேண்டிய நிலையில் உள்ளனர். இவர்கள் தனியான ஒரு தேசமாகும். தமது பாதுகாப்பையும், நீண்ட கால நலன்களையும் கருதி தனியான அரசை அமைப்பதோ அல்லது தமிழீழ அரசை உள்ளடக்கிய அரசுகளின் கூட்டமைப்பில் இணைந்து கொள்வதோ, விரும்பினால் சிறிலங்கா அரசுக் கட்டமைப்பினுள் தம்மை உட்படுத்திக் கொள்வதோ அத்தேசத்தின் சுயநிர்ணய உரிமையின் பாற்பட்ட விடயமாகும். முஸ்லீம் தேசமானது ஜனநாயகபூர்வமாக வெளிப்படுத்தும் கோரிக்கைகளுக்கு முற்றிலும் சமத்துவ அடிப்படையில் ஆதரவளிப்பது, பங்களிப்பது ஈழத்தமிழரின் கடமையாகும்.

எமது கட்சியானது அடக்கப்படுகின்ற தேசங்கள் என்ற வகையில், தமிழ் - முஸ்லீம் நல்லுறவுக்காக உறுதியுடன் பாடுபடும்.

சிறிலங்காவில் உள்ள முஸ்லீம்களைப் பொறுத்தவரை, அவர்கள் தாம் விரும்பும் பட்சத்தில் முஸ்லீம் தேசத்துடன் தம்மை அடையாளப்படுத்தவும் அல்லது அவர்களுடன் இணைந்தும் வாழ்வதற்கான உரிமைகளைக் கொண்டிருக்கிறார்கள்.

மலையகத் தமிழர்

மலையக தமிழர் ஒரு தனியான தேசமாகும். இவர்களது தாயகம் மலையகமாகும். அடக்கப்படுகின்ற தேசம் என்ற வகையிலும், உழைக்கும் மக்களை பெரும் எண்ணிக்கையில் கொண்டவர்கள் என்ற வகையிலும் எமது தேசத்தின் ஒருமைப்பாடு இத்தேசத்திற்கு உள்ளது. அடக்குமுறைக்கு எதிராகவும், சுரண்டலுக்கு எதிராகவும் இவர்கள் மேற்கொள்ளும் எல்லா வகையான போராட்ட வடிவங்களுக்கும் எமது கட்சியின் நிபந்தனையற்ற பங்களிப்பும் ஆதரவும் உண்டு.

தமிழீழத்தில் வாழ்கின்றன அனைத்து மலையகத் தமிழர்களும், தமிழீழத்தைத் தாயகமாக் கருதி இடம்பெயர்ந்து வருகின்ற மலையகத் தமிழர்களும் தமிழீழத்தின் பிரஜைகளாவர். இவர்கள் மீதான சகல அடக்குமுறைகளுக்கும் எதிராக எமது கட்சி முன்னின்று போராடும்.

## ஐ. சிங்கள தேசம்

சிங்கள உழைக்கும் மற்றும் விளிம்பு நிலை மக்களின் பெரும்பான்மையினர் பௌத்த சிங்களப் பேரினவாத சித்தாந்தத்திற்கு பலியாகி இருக்கின்றனர். சிங்களப் பேரினவாத சக்திகள் ஏனைய இனங்கள் மீது கட்டவிழ்த்து விட்ட அடக்குமுறைகளின் பொருள்வகைப் பலன்களை சிறிய அளவில் ஒரு குறிப்பிட்ட காலம் வரையிலும் சிங்கள மக்கள் அனுபவித்து வந்தனர். தமிழ் மக்களது போராட்டம் தீவிரமடையும் போது விரிவடைந்த யுத்தத்தினால் இந்தப் பலன்கள் கணிசமாக இழக்கப்பட்டதுடன், சிறிலங்கா அரசின் ஆக்கிரமிப்பு யுத்தத்திற்கு அவசியமான பொருள்வகை, ஆள்வகை வளங்களை இவர்களே செலுத்தியாக வேண்டியுள்ளது. இதன் காரணமாக ஆளும் குழுமத்துடன், (ruling block) ஏற்படக் கூடிய தீவிர முரண்பாடுகளை, சிங்கள பேரினவாத சித்தாந்தம் தணியச்செய்து சிங்கள தேசத்தை ஆளும் குழுமத்துடன் இணைத்து வருகிறது.

பெரும்பாலான இம்மக்களின் அடிப்படை நலன்களுக்கு சிங்கள ஆதிக்கக் கூட்டின் நலன்கள் விரோதமாக அமைவதனால் தமிழ் தேசத்தின் எதிரி பேரினவாத ஆதிக்கக் குழுமமும் சிங்கள அரசுமே அன்றி சிங்கள மக்கள் அல்ல. ஈழத்தில் ஒரு உண்மையான ஜனநாயக் குடியரசு அமைவது பரந்துபட்ட சிங்கள மக்கள் மத்தியில் சாதகமான தாக்கத்தையே ஏற்படுத்தும்.

தமிழீழ விடுதலைப் போராட்டமும் சிறிலங்காவில் சிங்கள மக்களின் புரட்சியும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய, ஆனால் தனித்தனியான இரண்டு போராட்டங்களாகும். சிறிலங்கா புரட்சி என்பது சிங்கள உழைக்கும் மற்றும் விளிம்புநிலை மக்களின் போராட்டம் என்ற வகையில் சிறிலங்கா அரசுக்கு எதிராக அவர்கள் நடாத்தும் எல்லா வடிவிலான போராட்டங்களுக்கும் புரட்சிகர சர்வதேசிய கொள்கையின் அடிப்படையில் எமது ஆதரவும் பங்களிப்பும் உண்டு.

பல தசாப்தங்களுக்கு முன்னர் தமிழீழத்தில் சுயமாக குடியேறி வாழ்ந்துவரும் சிங்கள மக்களைத் தவிர, சிங்கள அரசினால் திட்டமிட்டுக் குடியேற்றப்பட்டுள்ள பெருமளவிலான சிங்கள மக்களைப் பொறுத்தவரையில் தமிழ் ஈழம் அவர்களது பாரம்பரியத் தாயகம் அல்ல. பின்னையவர்களிலும் சிங்கள அரசுக்கும், சிங்கள ஆக்கிரமிப்புப் படைகளுக்கும் நேரடியாகவோ மறைமுகமாகவோ துணையாக நிற்பவர்களையும் வெறுமனே அடிப்படை வாழ்வுத் தேவையுடன் நின்று கொள்பவர்களையும் எமது கட்சி வேறுபடுத்திப் பார்க்கிறது.

ஈழவிடுதலைப் போராட்டம் தீவிரமடைந்து அது முனைப்பாக நடைபெறும் இடங்களில் - தமிழ் ஈழத்தினுள்ளோ அல்லது எல்லைப் புறங்களிலோ - நிராயுதபாணிகளான மற்றும் சிங்களப் படையினருக்கு எந்த வகையிலும் ஒத்துழைப்பு வழங்காத சிங்கள மக்களின் உயிர்களுக்கும், உடமைகளுக்கும் தமிழ் தரப்பினால் சேதம் விளைவிக்கப்படுவதை எமது கட்சி எதிர்த்து நிற்கும்... தமிழீழ ஜனநாயகக் குடியரசில் தொடர்ந்தும் வாழ விரும்பும் சிங்கள மக்கள் தொடர்ந்தும் இங்கேயே வாழும் உரிமையுடையவர்கள்.

இவர்கள் ஒரு தேசிய சிறுபான்மையாக மதிக்கப்படுவர். சிங்கள மொழி தேசிய மொழி ஆக்கப்படும். இவர்களது கலாச்சாரம் உட்பட அனைத்து ஜனநாயக உரிமைகளும் உத்திரவாதப்படுத்தப்படும்.

## ஒ. இந்தியா

எமது புவியியல் அமைவிடம் காரணமாக தமிழீழ விடுதலைப் போராட்டமானது குறிப்பான புவிசார் அரசியல் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றது. முழு உலகையும் தமது ஆதிக்கத்தின் கீழ் கொணர முனையும் ஏகாதிபத்திய மற்றும் நவகொலனித்துவ சக்திகளுக்கும் தென்னாசியாவின் பிராந்திய வல்லரசான இந்திய அரசுக்கும் இடையில் நடைபெறும் பலப்பரீட்சை எமது அரசியலில் கலப்பதே புவிசார் அரசியலின் சாராம்சமாகும். இவ் ஆதிக்க சக்திகளுக்கு இடையே குறிப்பான முரண்பாடுகள் நிலவினாலும், இப்பிராந்தியத்தில் புதிய தமிழீழ அரசு ஒன்று அமைந்துவிடக் கூடாது என்பதில் இத் தரப்புகளுக்கு பொதுநலன் இருப்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். எனவே நாம் ஏகாதிபத்திய, நவகொலனித்துவ ஆதிக்கத்தை எதிர்க்கும் அதேசமயம் தென்னாசியப் பிராந்திய அண்டைய நாடுகளின் மீது மேலாதிக்கம் செலுத்துகின்றதும், குறிப்பாக தமிழீழ விடுதலைப் போராட்டத்தை நசுக்கியும் வருகின்ற இந்திய அரசின் முயற்சிகளையும் எதிர்க்க வேண்டியுள்ளது.

எமது விடுதலைப் போராட்டத்தை நசுக்கியும் தனது அரசில் அமையும் தேசங்களை அடக்கியும் வருகின்ற இந்திய ஆளும் குழுமத்தின் நலன்களுக்கு, தமிழீழ அரசு உருவாவது எதிரானதாகும். எனவே இந்திய அரசும் அதனைத் தாங்கி நிற்கும் ஆதிக்கக் கூட்டுகளும் ஈழத்தமிழரின் எதிரிகளாகும்.

இந்தியாவில் தமது வர்க்க, சமூக விடுதலைக்காகப் போராடும் அடக்கப்படும்-விளிம்புநிலை வர்க்கங்கள்-சமூக சக்திகளும், தமது தேசிய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விடுதலைக்காகப் போராடும் மக்களும், அடக்கப்படும் தேசங்களும் முஸ்லீம்களும் தலித்களும் எமது நட்பு சக்திகளாகும். இப்போராட்டங்களுக்கு ஆதரவளிப்பதும் பங்களிப்பதும் எமது சர்வதேசக் கடமைகளில் ஒன்றாகும்.

எமது தேசத்தின் விடுதலைக்கு எதிராக இந்திய அரசு மேற்கொள்ளும் எல்லாவித நடவடிக்கைகளையும் எதிர்த்து எமது கட்சி உறுதியாகப் போராடும்.

### ஓ. ஏகாதிபத்திய, நவகொலனித்துவ சக்திகள்

இன்று, அமெரிக்க ஐரோப்பிய ஏகாதிபத்திய முகாம்கள், மற்றும் ஜப்பானிய நவகொலனித்துவ முகாம்கள் உலகில் நிலவுகின்றன. இவற்றினிடையே முரண்பாடுகளுடன் கூடிய ஐக்கியம் காணப்படுகின்றது. இவை, மூன்றாம் உலக நாடுகளை நேரடியாக அரசியல்ரீதியில்கட்டுப்படுத்தாதது போல தோன்றினாலும், பல்வேறு பொருளாதார, கலாச்சார வடிவங்களுக்கு ஊடாகச் சுரண்டியும், கட்டுப்படுத்தியும் வருகின்றன.

எமது விடுதலைப் போராட்டமானது தென்னாசியாவில் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தும் என்ற வகையில் ஜப்பானிய நவகொலனித்துவம் பற்றிய குறிப்பான கவனம் எமக்குத் தேவை.

இந்த ஏகாதிபத்திய, நவகாலனித்துவ அரசுகள் சிறிலங்கா அரசுடன் நெருக்கமான உறவுகளைப் பேணுவதோடு, தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு எதிராக சிறிலங்கா அரசுக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் ஆதரவும் உதவியும் வழங்கி வருகின்றன.

ஏகாதிபத்திய மற்றும் நவகொலனித்துவ போட்டாபோட்டிகளில் இருந்து எமது தேசிய நலன்களை பாதுகாக்கும் வகையில், அவற்றிற்கிடையேயான முரண்பாடுகளை எமது கட்சி பயன்படுத்தும். எமது தேசிய நலன்களுக்கு குந்தகம் ஏற்படாத வகையில், பிராந்திய, அரசியல், பொருளாதாரக் கூட்டமைப்புகளில் எமது தேசம் பங்குபற்றும்.

இத்தகைய சூழ்நிலையில், தமிழீழ விடுதலைப் போராட்டமானது, தனது வெற்றியையும் தொடர்ச்சியான நிலைத்தலையும் உறுதிப்படுத்திக் கொள்வதற்கு ஏகாதிபத்திய, நவகொலனித்துவ எதிர்ப்பைக் கொண்டிருக்கும்.

ஏகாதிபத்தியத்திற்கும் நவகொலனித்துவத்திற்கும் எதிரான சக்திகளான மூன்றாம் உலக நாடுகளுடனும் மற்றும் அடக்கப்படுகின்ற - விளிம்புநிலை தேசங்களுடன் மக்களுடனும் எதிர்ப்பியக்கங்களுடனும் எமது கட்சி இணைந்து போராடும்.

### ஔ. தமிழீழ ஜனநாயக் குடியரசு

தமிழ்த் தேசத்தின் புரட்சிகர ஜனநாயக விழுமியங்களின் தொகுப்பாக, இறைமையும் தன்னாதிக்கமும் கொண்ட தமிழீழ ஜனநாயகக் குடியரசு அமைக்கப்படும்.

இக்குடியரசின் ஆட்சிக் குழுமமாக அடக்கப்பட்ட, சுரண்டப்படும், விளிம்பு நிலை மக்களும், ஜனநாயகப் பிரிவினரும் அமைவர்.

இக்குடியரசை அமைக்கப் போராடிய தமிழ்த் தேசத்தின் சகல வர்க்கங்களும் சமூகப் பிரிவுகளும் தமது நலன்களை அடைந்து கொள்வது அரசியல் யாப்பு ரீதியிலும் நடைமுறை ரீதியிலும் உத்தரவாதப்படுத்தப்படும்.

தமிழீழத்திலிருந்து வெளியேற்றப்பட்டு, இந்தியாவிலும், சிறிலங்காவிலும் வாழும் தமிழீழப் பிரசைகளுக்கு சகல உரிமைகளும் வளங்களும் உத்தரவாதப்படுத்தப்படும்.

புலம்பெயர்ந்து வாழும் ஈழத்தமிழரும் அவர்களின் உறவுகளும் மீண்டும் தமிழீழத்திற்கு குடிபெயர்கையில் தமிழீழப் பிரசைகள் என்ற வகையில் அவர்களது அனைத்து உரிமைகளும் உத்தரவாதப்படுத்தப்படும்.

தமிழீழ ஜனநாயக் குடியரசின் அரசியல் யாப்பானது, ஜனநாயகம், சமூக நீதி, மனித உரிமைகள் என்பவற்றை அடிநாதமாகக் கொண்டிருக்கும்.

இனம், சாதி, பாலினம், மதம், பாலுறவுத் தேர்வு, வயது மற்றும் பிரதேச வேறுபாடுகளுக்கு அப்பால் அனைவரும் சமத்துவமாக நடாத்தப்படுவதும், இதுவரை காலமும் அடக்கப்பட்டு வந்துள்ள சமூகப் பிரிவுகள் தம்மைப் பலப்படுத்தும் விதத்தில் "நேர்மறையான பாகுபாட்டை" ஏற்படுத்துவதும் அரசியல் யாப்பின் மூலமும் நடைமுறை ரீதியிலும் உறுதிப்படுத்தப்படும்.

புரட்சியினதும், குடியரசினதும் நலன்களுக்கு விரோதமாகப் போகாத வரையில், சகல தேசபக்த வர்க்கங்கள் மற்றும் சமூகப் பிரிவுகளின் சமூக, பொருளாதார அரசியல் உரிமைகள் அங்கீகரிக்கப்படும்.

தமிழீழ ஜனநாயகக் குடியரசு மற்றும் தேசத்தின் நலன்களுக்கு ஆதரவான அரசசார்பற்ற அமைப்புகள் தமிழீழத்தில் செயற்படுவதற்கு அங்கீகரிக்கப்படும்.

குடியரசின் சட்டவாக்க, நிர்வாக அமைப்பாக மக்கள் பிரதிநிதிகள் அவை செயற்படும். இந்த அவைக்கு ஜனநாயக பூர்வமான தேர்தல்கள் மூலம் தெரிவு செய்யப்படுகின்ற பிரதிநிதிகள், எந்த நேரத்திலும் திருப்பியழைக்கப்படக் கூடியவர்களாக இருப்பர்.

அரசு தன்னை மக்களுடன் நெருக்கமாக இணைத்துக் கொள்ளக் கூடிய விதத்தில், பலமான உள்ளூராட்சி அமைப்புகள் நிறுவப்படும். அரசினால் மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்திச் செயற்பாடுகள் அனைத்தும் இவ் உள்ளூராட்சி அமைப்புகளின் அங்கீகாரத்தையும் பங்குபற்றுதலையும் பெறுவது உத்தரவாதப்படுத்தப்படும்.

முற்றிலும், சுதந்திரமாக இயங்கக் கூடிய நீதித் துறை உருவாக்கப்படும்.

அடிப்படை மனித உரிமைகள் அரசியல் யாப்பின் மூலம் உத்தரவாதப்படுத்தப்படும். ஒருவரது உடல், குடியிருப்பு அத்துமீறாப்படாமை உத்திரவாதப்படுத்தப்படும். அடிப்படை மனித உரிமைகள் என்பவை உழைப்பாளிகள், பெண்கள், சாதி என்ற பெயரில் அடக்கப்பட்டோர், சிறுவர்கள், வயோதிபர்கள் போன்ற அனைவரது உரிமைகளையும் உள்ளடக்கும் விதமாக வலுப்படுத்தப்படும்.

மக்கள் அமைப்பாகவும், கூட்டங் கூடவும் கருத்தை வெளிப்படுத்தவும், புரட்சிகர நியதிகளின் அடிப்படையில் தம்மை ஆயுதபாணிகளாக்கவும் உரிமைகள் உடையவராக இருப்பர்.

"தேசவழமைச் சட்டம்", மற்றும் ரோமானிய - டச்சு - ஆங்கில சட்டங்களைத் தழுவி அமைக்கப்பட்ட சிவில் மற்றும் குற்றவியல் சட்டங்களில் உள்ள பிற்போக்கு அம்சங்கள் நீக்கப்பட்டு, இவற்றிற்குப் பதிலாக ஜனநாயக சமுதாயத்தின் முற்போக்கான அம்சங்களை பிரதிபலிக்கும் விதத்திலான புதிய சட்டக் கோவைகள் இயற்றப்படும்.

மனிதரை இழிவுபடுத்தும் தண்டனை முறைகள் ஒழித்துக் கட்டப்படும். சித்திரவதை செய்வது மனித குலத்திற்கு எதிரான தீங்கியல் குற்றமாக பிரகடனப்படுத்தப்படும்.

அரசு மதச் சார்பற்றதாக இருக்கும். அரசிலிருந்து மதமும், மத நிறுவனங்களிலிருந்து பாடசாலைகளும் விடுவிக்கப்படும்.

மதமானது முற்றிலும் ஒருவரது தனிப்பட்ட விடயமாகக் கருதப்படும். மனச்சாட்சிச் சுதந்திரம் பேணப்படும்.

ஏதாவது ஒரு சமூகப் பிரிவை அடக்குவதற்கு துணைபோகும் சடங்குகள், மத நிறுவனங்கள் போன்றவை, அரசியல் அமைப்பின் அடிநாதமாக விளங்கும் ஜனநாயகம், சமூக நீதி என்பவற்றை பேணும் விதத்தில் தம்மை மறுசீரமைத்துக் கொள்வதற்கான சூழ்நிலைகள் உருவாக்கப்படும்..

மக்களின் நலன்களையும் உணர்வுபூர்வமான பங்குபற்றுதலையும் அடிப்படையாகக் கொண்ட சுயசார்புப் பொருளாதாரம் நிலைநாட்டப்படும். வங்கித்துறை, பொதுப்போக்குவரத்து, தொலைத்தொடர்பு, சுகாதாரம், கல்வி, சர்வதேசத் தொடர்பு போன்ற துறைகள் அரசின் கட்டுப்பாட்டில் இருப்பது உறுதிப்படுத்தப்படும்.

ஏனைய துறைகளில் தனியார் முதலீடு செய்வது தேசத்தின் நலன்களுக்கும் அடக்கப்பட்ட வர்க்கங்கள், சமூக சக்திகட்கு பாதகமாக அமையாதவாறு உறுதிப்படுத்தப்படும். உடல் உழைப்புக்கும், மூளை உழைப்புக்கும் இடையிலான ஊதிய வேறுபாடுகள் கணிசமான அளவில் குறைக்கப்படுவது உறுதிப்படுத்தப்படும்.

பொருள்வகையிலும், கலாச்சார ரீதியிலும் முன்னேறிச் செல்லும் வகையில் தொழிலாளரது உரிமைகள் உறுதிப்படுத்தப்படும்.

வேலை நேரத்தைக் குறைப்பதற்கும், தொழிலாளரது சிறப்புத் தேர்ச்சி, கலாச்சார வளர்ச்சி என்பவற்றை அடைவதற்குமான வாய்ப்புகள் உத்தரவாதப்படுத்தப்படும்.

தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்யும் உரிமை உத்தரவாதப்படுத்தப்படும்.

வேலைத் தளங்களில் விபத்துகள் நேர்வதற்கான சந்தர்ப்பங்களை குறைப்பதற்கு கவனம் எடுக்கப்படும், நேரும் விபத்துகளுக்கு நியாயமான இழப்பீடு உறுதிப்படுத்தப்படும்.

வேலை வாய்ப்புக்களைப் பெறமுடியாதவர்களுக்கான உரிமைகளும் அடிப்படைத் தேவைகளும் பூர்த்தி செய்யப்படுவது உறுதிப்படுத்தப்படும்.

பொருத்தமான நிலச்சீர்திருத்தம் மூலமாகவும் பாவனையில் இல்லாத



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நிலங்களை அரசு பொருத்தமான முறையில் மீள்பங்கீடு செய்வதன் மூலமாகவும், புதிய விவசாயக் குடியேற்றத் திட்டங்கள் மூலமாகவும் நிலமில்லாப்பிரச்சினைக்கான தீர்வு உறுதிப்படுத்தப்படும்.

நீர்ப்பாசனமானது அரசின் கட்டுப்பாட்டின் கீழும், விவசாயிகளின் ஆலோசனைகளுடனும் பேணப்படும்.

விவசாயிகளுக்கு தேவையான வளங்கள் மற்றும் விவசாயத்திற்கான மூலப் பொருட்கள் நியாயமான விலையிலும், கடன் அடிப்படையிலும் கிடைப்பது உறுதிப்படுத்தப்படும். கட்சியின் கொள்கை நிலைப்பாடுகளிலிருந்து இவ்விடயம் பரிசீலிக்கப்படும்.

விளைபொருட்களுக்கு நியாயமான விலை கிடைப்பது உத்தரவாதப்படுத்தப்படும்.

விவசாயத்தில் இயந்திரப் பாவனையை அதிகரிக்கும் விதத்தில் கூட்டுறவு, கூட்டுப் பண்ணை முறைகள் ஊக்குவிக்கப்படும்.

கடல் வளமானது முற்றிலும் தேசிய மற்றும் கூட்டுறவுச் சொத்தாக்கப்படும். தேசிய நலன்களுக்கு விரோதமான கடல்வள ஒப்பந்தங்கள் யாவும் இரத்து செய்யப்படும். புதிய மீனவ குடியேற்றங்கள் ஏற்படுத்தப்படும். மீனவர்களின் குடியிருப்பு மற்றும் சுகாதார விடயங்களில் அரசு தனியான கவனம் செலுத்தும். மீனவர்களின் கடன்கள் யாவும் இரத்துச் செய்யப்படுவதுடன், மீன்பிடி உபகரணங்கள் மலிவான விலையிலும் நீண்டகால கடன் அடிப்படையிலும் வழங்கப்படுவது உறுதிப்படுத்தப்படும். மீனவர் சங்கங்கள் சுயாதீனமாகச் செயற்படவும், இவை கடல் உணவுகளை பதப்படுத்தவும், சந்தை வாய்ப்புகளைக் கண்டுகொள்ளவுமான வசதிகள் உருவாக்கப்படும்.

பொருளாதாரம் கைத்தொழில்மயப்படுத்தப்படும்.

விவசாயம், மீன்பிடி, குடிசைக் கைத்தொழில்கள் என்பவற்றில் பாரம்பரிய அறிவு, அனுபவத்தோடு மக்களது நலன்களுக்கு பொருத்தமான விதத்தில் நவீன தொழில்நுட்பங்கள் அறிமுகப்படுத்தப்படும்.

விவசாயத்திற்கும் கைத்தொழிலுக்கும் இடையிலும், இலகுரக-நடுத்தர-கனரக கைத்தொழில்களுக்கிடையிலும், உற்பத்திக்கும் - சுற்றுச் சூழல் பராமரிப்பிற்கும் இடையிலும் முறைமையான சமநிலை பேணப்படும்.

எமது மக்களது ஆற்றல்கள் முறையாகப் பயன்படுத்தும் விதத்திலும், தேசத்தின் வளங்களை பெருக்கும் விதத்திலும், உலகளாவிய ரீதியில் நடைபெறும் விஞ்ஞான வளர்ச்சிகளில் எமது தேசம் பின்தங்கி நிற்காத விதத்திலும் நவீன உயர் தொழில்நுட்பங்கள் அறிமுகப்படுத்தப்படும்.

கந்துவட்டி, பதுக்கல், கொள்ளை இலாபமீட்டுவது போன்றவை ஒழிக்கப்படும்.

உழைக்கும் மக்களுக்கு அத்தியாவசியமான உணவு, உடை, இருப்பிடம், மருத்துவம், போக்குவரத்து, கல்வி, கலாச்சாரச் சாதனங்கள் போன்றவை பரந்துபட்ட மக்களது வாங்கும் சக்திக்கு உட்பட்டு இருப்பது உத்தரவாதப்படுத்தப்படும்.

மறைமுக வரிகள் அனைத்தும் நீக்கப்பட்டு, வருமான அடிப்படையிலான நேர்முக வரிவிதிப்பு முறை அறிமுகப்படுத்தப்படும்.

புலம்பெயர்ந்து வாழும் ஈழத் தமிழரது மூலதனம், திறன், உழைப்புச் சக்தி என்பவை தமது சொந்தநாட்டை கட்டியெழுப்பும் விதத்தில் பயன்படுத்தப்படுவது ஊக்குவிக்கப்படும்.

தேசத்தின் பொருளாதார சுதந்திரம், சுயுசார்பு என்பவை பாதிக்கப்படாத விதத்தில் அந்நிய மூலதனம் குறிப்பிட்ட சில துறைகளில் அனுமதிக்கப்படும்.

தனியார் துறைக்கு மாற்றான கூட்டுறவு முறை, கூட்டுப் பண்ணைகள் போன்றவற்றை ஊக்குவித்து சோசலிசத்திற்கான பாதைகள் திறந்து விடப்படும்.

மூளை உழைப்புக்கும் உடல் உழைப்புக்கும் இடையே இணக்கமான உறவையும் சம அந்தஸ்தையும் ஏற்படுத்தக் கூடிய விதத்திலும் தேசத்தின் பொருளாதாரம், கலாச்சாரம் என்பவற்றை உயர்நிலையில் பேணக்கூடிய விதத்திலும் புதிய கல்வி முறைமை அறிமுகப்படுத்தப்படும்.

முறைசார் கல்வி வடிவங்களோடு, முறைசாராக் கல்வி வடிவங்களும் ஊக்குவிக்கப்படும்.

அனைவருக்கும் இலவசக் கல்வி என்பது அரசியல்யாப்பு ரீதியாக உத்தரவாதப்படுத்தப்படும்.

தமிழீழத்தின் பிரஜை ஒருவர் தான் விரும்புகின்ற துறையில் கல்வி கற்பதற்கான வசதிகள் உத்தரவாதப்படுத்தப்படும்.

அனைத்து அடக்குமுறைகள் மற்றும் அரசியல் பற்றிய விழிப்புணர்வை அனைவரும் பெறும் வகையில் கல்வித்துறையானது மறுசீரமைக்கப்படும்.

அனைவரும் பாலியற் கல்வி பெறுவது உறுதிப்படுத்தப்படும்.

ஈழத்தமிழரின் அழிந்து செல்லும் பாரம்பரிய கலாச்சார அம்சங்கள் மற்றும் கலை, இலக்கிய வடிவங்கள் என்பவை மீளுருவாக்கம் செய்யப்படும். நிலவுகின்ற கலாசார அம்சங்கள் மற்றும் கலை, இலக்கிய வடிவங்களில் காணப்படக் கூடிய பிற்போக்கு அம்சங்கள் அகற்றப்பட்டு புரட்சிகர ஜனநாயக விழுமியங்களைக் கொண்டவையாக அவை மாற்றியமைக்கப்படும்.

தமிழ்த் தேசத்தின் புரட்சிகர, ஜனநாயகப் பண்புகளை தொடர்ச்சியாக வளர்த்துச் செல்லக் கூடிய நவீன கலை வடிவங்களுக்கு ஆதரவும், நிதி உட்பட தேவையான வளங்களும் கிடைப்பது உறுதிப்படுத்தப்படும்.

கலைஞர்கள் தேசத்தின் கலாச்சாரச் சொத்தாக மதிக்கப்பட்டு, அவர்களின் வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படும்.

மனிதரை இழிவுபடுத்துவதும், அடிப்படை ஜனநாயக, மனித உரிமைகளை குறிப்பிட்ட சமூகப்பிரிவினருக்கு மறுக்கும் அத்தனை நடைமுறைகளும் அரசியல் யாப்பில் தீங்கியல் குற்றங்களாக்கப்படும்.

சாதி ரீதியாக ஏற்றத்தாழ்வு கற்பிப்பதும், அவ்வாறான நடைமுறைகளும் சட்டரீதியாக தடைசெய்யப்படும். வீதிகள் மற்றும் ஊர்களின் பெயர்களில் சாதீய அடையாளங்கள் வெளிப்படுவது தடைசெய்யப்படும். தொழில்களை சாதி ரீதியாக பாகுபடுத்துவது முடிவு கட்டப்படும்.

அவரவர் தகுதிக்கும், விருப்பத்திற்கும் ஏற்ப எந்தவொரு தொழிலையும் தேர்ந்தெடுக்கும் சுதந்திரம் உத்தரவாதப்படுத்தப்படும்.

சாதி ரீதியிலான சில தொழில்கள் தொடர நேரிட்டால் அவற்றை முற்றிலும் தொழிற்துறை நிறுவன வடிவங்களுக்கு கொண்டு வருவதும் சாதீயத் தடயங்களும், இழிவுபடுத்தலும் இல்லாதொழிவதற்கான முறைமைகளும் உறுதி செய்யப்படும்.

சுகாதாரத்தை மேம்படுத்தும் தொழில்களுக்கு குறைந்த வேலைநேரமும், உயர்ந்த ஊதியமும் அளிப்பதன் மூலமாக இந்தத் தொழில்களில் பல்வேறு சமூகப் பிரிவினர் விருப்பத்துடன் ஈடுபட ஊக்குவிக்கப்படும்.

குடியிருப்பு, குடிநீர் வளங்கள், சுகாதாரம் போன்ற அடிப்படை தேவைகளை அடக்கப்பட்ட, விளிம்புநிலை மக்கள் பெறுவது உறுதிப்படுத்தப்படும்.

"தீட்டு", "தூய்மைக்கேடு" என்று கருதப்படும் சடங்குகள் மற்றும் தொழில்களை கைவிடுவதற்கு ஊக்குவிக்கப்படும்.

சாதீய அடக்குமுறைக்கு நியாயம் கற்பிக்கும் சித்தாந்தங்களிற்கு எதிராக கட்சி உறுதியுடன் போராடும்.

சமய நிறுவனங்களும் அவற்றின் நடவடிக்கைகளும் சாதீய பாகுபாடுகளைக் காப்பவையாக இல்லாது இருப்பது உத்தரவாதப்படுத்தப்படும்.

மதச் சீர்திருத்த, பகுத்தறிவுவாத, சமுதாய சீர்திருத்த இயக்கங்களுக்கு ஊக்குவிப்பு வழங்கப்படும்.

எதிர்கலாச்சார நடவடிக்கைகள் மூலமாக உயர்மானுட, ஜனநாயக விழுமியங்கள் சமூகத்தில் மேலாதிக்கம் பெறுவது உறுதிப்படுத்தப்படும்.

சமூக, கலாச்சார ரீதியாக காலங் காலமாக அடக்கப்பட்டு வந்த சமூகப்பிரிவுகள், இத்துறைகளிலே சம உரிமைகளைப் பெறுவது உறுதிப்படுத்தப்படும்.

சாதிய அடக்குமுறையற்ற, ஏற்றத் தாழ்வு அற்ற புதியதொரு கலாச்சாரம் கட்டமைக்கப்படும்.

கலப்புக் குடும்ப உறவுகள் ஊக்குவிக்கப்படும்.

சாதியம் நீடிப்பதற்கான பொருள்வகை அடித்தளமும், எதிர்கலாச்சார நடவடிக்கைகள் மூலமாக சித்தாந்த ஆதிக்கமும் முறியடிக்கப்படுவதன் மூலமாக சாதிய அடக்குமுறை இல்லாதொழிக்கப்படும்.

சமூக, பொருளாதார, கலாச்சார, அரசியல் துறைகளில் ஆண் - பெண்களுக்கிடையில் ஏற்றத்தாழ்வு காண்பது அரசியல் யாப்பில் குற்றமாகக் பிரகடனப்படுத்தப்படும்.

ஆணுக்கும் பெண்ணுக்கும் சம வேலைக்கு சம ஊதியம் உறுதிப்படுத்தப்படும்.

சட்டத்தின் முன் ஆண் - பெண் அசமத்துவத்தை கற்பிக்கும் தேசவழமைச் சட்டத்தின் பிற்போக்கு அம்சங்கள் நீக்கப்படும்.

திருமணத்தின் போது சீதனம், இனாம் பெறுவது தடைசெய்யப்படும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பெற்றோரின் சொத்தில் ஆண் - பெண் இருவருக்கும் சம உரிமை உத்தரவாதப்படுத்தப்படும்.

குடும்ப நிறுவனம் ஜனநாயகமயப்படுத்துவது உத்தரவாதப்படுப்படும்.

சமூக, பொருளாதார, அரசியல், கலாச்சார நடவடிக்கைகளில் பெண்கள் பங்குபற்றுவதை உத்தரவாதப்படுத்தும் விதத்தில் வீட்டு வேலைகள், குழந்தை பராமரிப்பு போன்றன சமூக உற்பத்தியாக மாற்றியமைக்கப்படும்.

வீட்டு வேலைகளில் முழுமையாக ஈடுபடும் பெண்* ஆண் இனர்க்கு, வீட்டு வேலைகளும் சமூக உற்பத்தியின் மொத்தத்தில் ஒரு பகுதி எனக் கொள்ளப்பட்டு அதற்கான ஊதியம் உத்தரவாதப்படுத்தப்படும்.

கர்ப்பம், பிரசவம் என்பவை சமூக மறு உற்பத்தியில் மிகவும் அத்தியாவசியமான அம்சங்கள் என்றவகையில் இவை சமூகத்திற்கு பயனுள்ள உழைப்பாகவே கருதப்படும்.

கர்ப்ப காலத்திலும், பிரசவ காலத்திலும் பெண்ணுக்கு ஊதியத்துடன் கூடிய போதியளவு விடுமுறை வழங்கப்படுவதும். இக்காலப்பகுதியில் துணைவருக்கும் இவை வழங்கப்படுவதும் உறுதிப்படுத்தப்படும்.

உடல் மற்றும் உடற் செயற்பாடுகள் மீது பெண்கள் தமது கட்டுப்பாட்டைக் கொண்டிருப்பது உத்தரவாதப்படுத்தப்படும்.

பெண்களுக்கான அனைத்து சுகாதாரத உரிமைகளும் உத்தரவாதப்படுத்தப்படும்.

எமது சமூகத்தில் உள்ள ஆணாதிக்க நலன்களை பேணுகின்ற அனைத்து முறைமைகளும் அம்பலப்படுத்தப்பட்டு, பெண்களின் சுய ஆளுமை வெளிப்படுவதற்கான சூழ்நிலைகள் உருவாக்கப்படும்.

பெண்கள் மீதான பாலியல் தொல்லைகள், பெண்களை அசூசையான வார்த்தைகளால் இழிவுசெய்தல் என்பவை தீங்கியல் குற்றங்களாகக் அரசியல் யாப்பிலும் நடைமுறையிலும் உத்தரவாதப்படுத்தப்படும்.

பாலியல் வன்புணர்ச்சியில் பாதிக்கப்பட்ட பெண்களின். சிறுவர்களின் வாக்குமூலங்கள் அக்குற்றங்களுக்கு எதிரான ஆதாரமாக கொள்ளப்படும். பாலியல் குற்றங்கள் இழைத்தவருக்கு உயர்ந்தபட்ச தண்டனை வழங்கப்படும்.

பாலியல் தொழிலில் ஈடுபடுத்துவதன் மூலமாக பாலியல் ஆற்றல்களை சுரண்டும் முறைமைகள் இல்லாதொழிக் கப்படும். பாலியல் தொழிலில் ஈடுபடுவதற்கு காரணமான சமூக, பொருளாதார நிலைமைகள் களைப்படும்.

பெண் என்பவள் சுதந்திரமான உணர்ச்சிகளும், பிரக்ஞையும் உள்ள ஒரு ஆன்மா என்ற அடிப்படையிலேயே மனிதர்களுக்கிடையிலான அனைத்து உறவுகளும் பரஸ்பரம் மரியாதை, காதல் அடிப்படையில் அமைவதற்கான நிலைமைகள் உருவாக்கப்படும்.

பெண்கள் மீதான வன்முறை கடுமையான குற்றமாக அரசியல் யாப்பில் பிரகடனப்படுத்தப்படும்.

சட்டம், அரசியல், பொருளாதாரம், கலை, இலக்கியங்கள், கலாச்சார நடவடிக்கைகள், மொழி, மதம், வெகுஜனத் தொடர்பு சாதனங்கள், மருத்துவம், உளவியல், ... போன்ற அனைத்துத் துறைகளிலும் ஆணாதிக்க சித்தாந்தத்தை தகர்த்தெறிவது உறுதிப்படுத்தப்படும்.

இளம்பராயம் முதலே அனைவரும் பால்நிலை விழிப்புணர்வு (gender awareness) பெறுவதற்கு கல்வி மற்றும் கலாச்சார நடவடிக்கை முலம் ஆவண செய்யப்படும்.

அரசியல் அரங்குகளில் பெண்களின் சமமான பங்களிப்பு. உத்தரவாதப்படுத்தப்படும்.

முற்றிலும் பெண் அங்கத்தவர்களைக் கொண்ட சிறப்பான குழுவினால் வகுக்கப்படும் "பெண்கள் சாசனம்" ஆனது அரசியலமைப்பின் ஒரு பகுதியாக பிரகடனப்படுத்தப்படும்.

சமூகத்தில் நிலவும் வயதுத்துவ சித்தாந்தங்கள் மற்றும் நடைமுறைகளுக்கு எதிராக போராட்டம் நடாத்தப்படும்.

சிறுவர்களதும் வயோதிபர்களதும் ஜனநாயக உரிமைகளை மறுக்கும், அவர்களை சுயமான ஒரு மனிதராகவே கருத மறுக்கும் வயதுத்துவ நடைமுறைகள் கைவிடப்படுவது உறுதிப்படுத்தப்படும்.

குடும்ப அமைப்பானது ஜனநாயக மயப்படுவதில் சிறுவர்களும் வயோதிபர்களும் குறிப்பான கடமைகளும் உரிமைகளும் உடையவர்களாக கருத்தில் கொள்வது உறுதிப்படுத்தப்படும்.

சிறுவர்கள் தேசத்தின் எதிர்காலம் என்ற வகையில் அவர்கள் தேசியத் சொத்தாக மதிக்கப்பட்டு பேணப்படுவர்.

சிறுவர்களது உரிமைகளை மறுப்பது, வேலையில் ஈடுபடுத்துவது, அவர்களை பாலியல் துஷ்பிரயோகத்திற்குட்படுத்துவது என்பவை தீங்கியல் குற்றங்களாகக் பிரகடனப்படுத்தப்படும்.

சிறுவர்களுக்கு அவசியப்படும் அனைத்து வாய்ப்புகளும் உத்தரவாதப்படுத்தப்படும்.

வயோதிபர்கள் சமூகத்தின் வளர்ச்சிக்காக தமது பங்களிப்பை வழங்கியவர்கள் என்ற வகையில் எமது சமூகத்தின் சொத்தாகும்.

வயோதிபர்கள் தேவையான பாதுகாப்பும் பராமரிப்பும் பெறுவது உத்தரவாதப்படுத்தப்படும்.

யாழ்ப்பாணத்தவரின் நலன்களை ஈழத்தமிழரின் நலன்களாக சித்தரிக்கும் "யாழ்மையவாத" சித்தாந்தத்திற்கும் நடைமுறைகளுக்கும் எதிராக கட்சி உறுதியுடன் போராடும்.

மத்திய தமிழீழம், தென் தமிழீழத்திலுள்ள "பின்தங்கிய" பிரதேசங்களில் போதியளவு "உள்ளகக் கட்டுமாணங்களை" (infra structures) நிறுவி, இந்தப் பிரதேசங்களில் வளர்ச்சி உறுதிப்படுத்தப்படும்.

தமிழீழமெங்கும் முறையான பொதுப்போக்குவரத்தும் மற்றும் குடியிருப்பு வசதிகளை நிறுவுவதன் மூலமாகவும், பொருளாதார, சமூக, கலாச்சார நடவடிக்கைகளை தீவிரப்படுத்துவதுடன் இப்பிரதேசங்கள் தமக்கேயுரிய விதத்தில் ஆனால் சமத்துவமாக ஒன்றிணைந்து பலமான தேசமாக உருவாவது உத்தரவாதப்படுத்தப்படும்.

நமது கட்சி சர்வதேச அரங்கில் ஏகாதிபத்திய நவகொலனித்துவ எதிர்ப்பையும், புரட்சிகர சர்வதேசியத்தையும் உயர்த்திப் பிடிக்கும்.

உலகெங்குமுள்ள சுரண்டப்பட்ட, அடக்கப்பட்ட, விளிம்புநிலை மக்களது போராட்டங்களுடன் தன்னை இணைத்துக் கொள்ளும்.

ஏகாதிபத்திய மற்றும் நவகொலனித்துவ சுரண்டலையும், அடக்குமுறைகளையும் எதிர்த்துப் போராடும் தேசங்களுடனும், புரட்சிகர, எதிர்ப்பியக்கங்களுடனும் எமது கட்சி தன்னை இணைத்துக் கொள்ளும்.

ஏகாதிபத்தியங்களை எதிர்த்துப் போராடும் விதத்தில் பலமான பிராந்திய, வளர்முக, முற்போக்கு நாடுகளது கூட்டமைப்புகளையும், புரட்சிகர, எதிர்ப்பியக்களின் கூட்டமைப்புகளையும் உருவாக்குவதில் நமது கட்சி முன்னிற்கும்.

சக தேசங்களது சுதந்திரத்தையும், இறைமையையும், தன்னாதிக்க உரிமையையும் மதித்துச் செயற்படும்.

சர்வதேச அரங்கில் எமது தேசத்தின் சமத்துவம், இறைமை, சுதந்திரம் என்பவற்றை விட்டுக் கொடுக்காது எமது கட்சி போராடும்.

தேசியம், ஜனநாயகம், சோசலிசம் ஆகியவை ஒன்றிலிருந்து மற்றொன்று பிரிக்க முடியாத அம்சங்களாகும்.

- எமது தேசத்தின் மீதான சிறிலங்கா அரசின் ஆதிக்கத்தை உடைத்தெறிவோம்!
- இறைமையும், தன்னாதிக்கமும் கொண்ட தமிழீழ ஜனநாயகக் குடியரசைப் படைப்போம்!
- எமது சமூக, பொருளாதார, கலாச்சார வாழ்வை மேம்படுத்தக் கூடிய சுய சார்புப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவோம்!
- ஆணாதிக்க அடக்குமுறைகளை துடைத்தெறிவோம்!
- சாதிய அடக்குமுறைகளை தகர்த்தெறிவோம்!
- பிரதேச முரண்பாடுகளை அகற்றி, ஒரே தேசமாக பலம் பெறுவோம்!
- எமது புரட்சிகர, ஜனநாயக உணர்வுகளையும் விழுமியங்களையும் உலகின் முன் உயர்த்திடுவோம்!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஏழூர் பேரினவாதிகள் !

1983 ஜுலையில், சிறீலங்கா அரசும் சிங்கள பேரினவாத சக்திகளும் ஈழத் தமிழர்களாகிய எம்மீது மேற்கொண்ட திட்டமிட்ட இனஅழிப்புகளினால், சிங்கள தேசத்தின் மீது இரண்டு விதமான பாதிப்புகள் ஏற்பட்டிருந்தன: ஒன்று, சர்வதேச அளவில் சிங்கள தேசமானது, இனவெறி கொண்ட சமூகமாக அடையாளம் காணப்பட்டது. இரண்டாவது, சிங்கள தேசத்தின் கணிசமான பிரிவினரிடையே, தமது தேசம் சார்ந்த குற்றவுணர்வு ஆழப் படிந்து விட்டது.

இவ்விரண்டு நிலைமைகளும், சிறீலங்கா அரசின் மீதும் பௌத்த-சிங்கள பேரினவாத சக்திகள் மீதும் கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்தி வந்திருக்கின்றன. சிங்களத் தேசத்தின் புறத்தேயும் அகத்தேயும் படிந்துவிட்ட இந்த அவமானக் கறைகள், ஒரு தசாப்தத்திற்கும் அதிக காலமாக அகற்றப்பட முடியாமல் இறுகியிருந்தன.

1983-1994 இடையிலான காலப்பகுதியில், சர்வதேச அரங்கில், சிறீலங்கா அரசு குறித்த எதிர்நிலையான படிமம் ஆழப்பதிக்கப்பட்டிருந்தது. இப்படிமத்தை ஊடறுத்து, தனக்கு தேவையான உதவிகளை-குறிப்பாக எம்மீதான ஆக்கிரமிப்பு யுத்தத்திற்கு அவசியமான வளங்களை-பெற்று கொள்வதில் சிறீலங்கா அரசு கடுமையான நெருக்கடிகளை சந்தித்து வந்தது. சிறீலங்காவின் உள்ளக கட்டுமானங்களை சீரமைப்பதற்கு கூட, அதிக நிபந்தனைகளுடன், பகுதி பகுதியாகவே கடன்களை பெறக்கூடிய இக்கட்டான நிலையை சிறீலங்கா அரசு முகம்கொடுத்தது.

மறுபுறம், சிறீலங்கா அரசுக்கும் சிங்கள தேசத்திற்கும் இடையிலான பிணைப்பு தளர்வான நிலையை அடைந்தது. சிறீலங்கா அரசு-சிங்களதேசம் என்பவற்றிற்கிடையே உறுதியான பிணைப்பை ஏற்படுத்தவதில், சிங்கள பேரினவாத சக்திகள், நீண்ட காலமாக பிரதான பாத்திரம் வகித்து வந்திருக்கின்றனர். 83க்கு பின்னர் சிங்கள தேசத்தை சேர்ந்த கணிசமான பிரிவினர் மத்தியில், அன்றைய இனஅழிப்புகள் தொடர்பான குற்றவுணர்வுபீடித்தருந்ததன் காரணமாக, பிறசமூகங்கள் மீது இனவெறியை தூண்டுகின்ற பேரினவாத சக்திகளின் சித்தாந்த ஆதிக்கம் குறிப்பிடத்தக்க அளவில் பலவீனமான நிலையை அடைந்திருந்தது. இதனால், சிறீலங்கா அரசின் யுத்த முனைப்புகளை தீவிரமாக ஆதரிக்க கூடிய மக்கள் பிரிவினரை, சிங்களதேசத்தின் மத்தியில் தொடர்ச்சியாக வார்த்தெடுக்கின்ற வலுவான கருத்தியல் தளம் உருவாக முடியாத நிலை காணப்பட்டது.

இவற்றின் மொத்த விளைவாக, சிறீலங்கா அரசின் யுத்த முனைப்புகள் தேக்கத்தையும் பின்னடைவுகளையும் சந்தித்தன. எம்மீதான ஆக்கிரமிப்பு யுத்தத்தை, தான் விரும்பிய வேகத்திலும் தீவிரமாகவும் முன்னெடுக்க முடியாத நிலைக்கு அரசு தள்ளப்பட்டிருந்தது.

இக்காலப்பகுதியில் சிறீலங்கா அரசின் யுத்த நடவடிக்கைகள் பெரிதும் தற்காப்பு உபாயத்தை கொண்டதாக அமைந்திருந்ததை இத்தகைய பின்னணியில் நாம் புரிந்து கொள்ள முடியும்.

இந்த நிலையை மாற்றியமைக்க வேண்டும் என்ற தேவை சிங்கள தேசத்தின் பல்வேறு பிரிவினர்களாலும் உணரப்பட்டு வந்தது. எந்தவொரு தேசமும் அவமானத்தையும் குற்றவுணர்வையும் சுமந்து கொண்டு நீண்ட காலத்திற்கு இயங்க முடியாது. எனவே இவற்றை அகற்றுவதற்கு இரண்டு தளங்களில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

முதலாவதாக, அரசியல் தளத்தில், தமிழர்கள் மீதான வன்முறைகள் (எனினும் இனஅழிப்பு என்ற அர்த்தத்தில் அல்ல) இடம்பெற்றமை பகிரங்கமாக ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றன. தமிழ்மக்களுக்கு கூடிய அரசியல் உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்ற கருத்து முன்வைக்கப்பட்டிருக்கின்றது. குறிப்பாக, சிறீலங்காவின் இன்றைய ஜனாதிபதியின் அரசியல் பிரவேசம், இத்தகைய மாற்றத்தை துலக்கமாக வெளிப்படுத்தியது. இதன் விளைவு அவருக்கு கிடைத்த பெரும் தேர்தல் வெற்றியாக அமைந்தது. இவற்றுடன் இணைந்ததாக, தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான ஒரு "சமாதானப்பொதியும்" முன்வைக்கப்பட்டிருக்கின்றது. இவற்றினூடாக, சர்வதேச அரங்கில் சிறீலங்கா அரசு குறித்தும் சிங்களதேசம் குறித்தும் நிலவி வந்த எதிர்மறை கருத்துக்கள் இப்போது படிப்படியே அகன்று வருகின்றன.

இரண்டாவதாக, கருத்தியல் தளத்தில், தமிழர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் (இங்கும், இனஅழிப்புகள் என்ற அர்த்தத்தில் அல்ல) சிறீலங்கா அரசினதும் சிங்கள இனவெறிச் சக்திகளினதும் திட்டமிட்ட செயலாக அல்லாமல், சமூகவிரோத கும்பலின் செயலாக, காடையர் கூட்டத்தின் வெறித்தனமாக சித்தரிக்கப்பட்டு வருகின்றன. இந்த இரண்டாவது அம்சம் குறித்து இங்கு நாம் சற்று விரிவாக பார்ப்பது அவசியம். ஏனெனில், ஒரு தசாப்த காலத்திற்கும் மேலாக சிங்களமக்கள் மத்தியில் சித்தாந்த ஆதிக்கத்தை கணிசமாக இழந்திருந்த பௌத்த-சிங்கள பேரினவாத சக்திகள் மீண்டும் ஆதிக்கம் பெறுவதற்கான சூழலை இந்நடவடிக்கைகள் உருவாக்கியுள்ளன.

1994க்குப் பின்னர், சிறீலங்காவின் அரசியல் தளத்தில் ஏற்பட்ட மாற்றத்துடன் இணைந்ததாக, கருத்தியல் தளத்திலும் மாற்றம் நிகழ்ந்தது. பௌத்த-சிங்கள பேரினவாத சித்தாந்தத்தினால் அகற்ற முடியாமல் போன, சிங்களதேசத்தின் மத்தியில் படிந்து விட்ட குற்றவுணர்வை, சிங்கள கலைஞர்கள், கலைகளினூடாக அகற்ற முயற்சித்தார்கள். குறிப்பாக, நாடகம் மற்றும் இலக்கிய தளத்தில் இக்குற்றவுணர்வை அகற்றுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்காக சிங்கள கலைஞர்கள், நவீன தொடர்பூடகங்களில் சக்திமிக்கவைகளில் ஒன்றான தொலைக்காட்சியை பெரிதும் பயன்படுத்தி வருகிறார்கள். 83 இனஅழிப்பு சம்பவங்களை பின்புலமாக கொண்டு, சிங்கள, தமிழ் பாத்திரங்களை உள்ளடக்கிய பல தொலைக்காட்சி நாடகங்கள் குறுகிய காலத்திற்குள் ஒளிபரப்பட்டுள்ளன, ஒளிபரப்பப்பட்டு வருகின்றன.

புகழ் பெற்ற சிங்கள தொலைக்காட்சி நாடக கலைஞர்கள் இவற்றில் பங்கு கொண்டிருக்கிறார்கள். சிங்கள நாடகங்களுக்குரிய மரபையும் மீறி, இத்தகைய நாடகங்கள் அதிக செலவுகளுடனும் "பிரமாண்டமாகவும்" தயாரிக்கப்படுகின்றன. இந்நாடகங்கள் அனைத்திலும் நாம் கிட்டத்தட்ட பின்வரும் பண்புகளை பொதுவாக காணமுடியும்.

கருணையும் மனிதாபிமான உணர்வும் கொண்ட பிரதான சிங்கள பாத்திரங்கள், அடக்கமும் பணிவுமிக்க தமிழ் பெற்றோர், ஆவேஷமும் உணர்ச்சிவசப்படும் தன்மையும் கொண்ட அவர்களின் மகன், இவற்றோடு, யுத்த களம் காண்பிக்கப்படுமாயின் மனிதாபிமானமும் கடமையுணர்வும் கொண்ட சிங்கள படை வீரர்கள், அவர்களில் ஒருவரின் காதல், கொலைவெறி கொண்ட தமிழ்போராளிகள், ஊழலில் ஈடுபடும் சில அரசியல்வாதிகள் மற்றும் சில படையதிகாரிகள். இத்தகைய பாத்திரங்களுடன், காடையர் கூட்டம் தமிழர்களை தாக்குவதான பின்னணியில், எவ்வாறு சிங்கள மக்கள் தமிழ்மக்களை காப்பாற்றுகின்றார்கள், எப்படி தமிழ் இளைஞன் ஆவேஷப்படுகிறான்... என்பதெல்லாம் உணர்ச்சிபூர்வமாக காட்சிப்படுத்தப்படுகின்றன.

இத்தகைய நாடகங்களிலிருந்து நாம் பின்வருவனவற்றை தொகுக்கலாம்:

1. பிரபலமான நடிக, நடிகையரை, தமிழ்மக்களை காப்பாற்றுகின்ற மனிதாபிமானமுள்ள சிங்கள கதாபாத்திரங்களாக காட்டுவதன் மூலம், சிங்கள மக்கள் மனதில், 83 இனஅழிப்புகளின் போது, தம்மில் பெரும்பாலானேர்ர் நேர்மையாகவும் மனிதாபிமானத்துடனும் நடந்து கொண்டதான உணர்வுபதிக்கப்படுகின்றது.

2. தமிழ் பெற்றோரை பணிவும் அடக்கமும் கொண்டவர்களாக காட்டுவதன் மூலம், முன்னைய தலைமுறையை சேர்ந்த தமிழர்கள் எவ்வளவு தூரம் சிங்கள மக்களுடன் பணிவாக நடந்து கொண்டார்கள் என்ற பெருமித உணர்வு சிங்கள

(தொடர்ச்சி 10இல்)

## மக்கள் களம்:

- தேசம் என்பதை பிரதேசம் போன்ற வரையறைக்குள் குறுக்கக்கூடாது என்று சொல்லும் நீங்கள், தாயகம் பற்றி அளவிற்கதிகமாக அழுத்துகின்றீர்க்ள். இது ஒரு முரண்நகையாக தோன்றுகிறது.

  - சிவசுதாகரன், தமிழகம்

- தமிழ் மக்களின் முழுமையான விடுதலையை பற்றி வலியுறத்தும் நீங்கள் விடுதலைபுலிகளின் அரசியல் பற்றி பேசுவதில் அதிகம் தயக்கம் காட்டுவதாக தெரிகிறது.

  - மனோகரன், கொழும்பு

- பெண்விடுதலைப்போராட்டமும் சமூக மாற்றமும் என்ற கடடுரையில் வர்க்க அடக்குமறை என்பது பொருளாதார தளதத்தில் நடைபெறுவதாகும் என்று குறிப்பிடப்படுகிறது. இது தவறான பார்வையாகும். வர்க்க அடக்குமறையானது அரசியல் , கலாச்சாரம். . . என பல தளங்களில் இடம்பெறுகிறது என்பதை ஆழ்ந்து பரிசீலிக்கும்போது புரிந்து கொள்ள முடியும்.

  பிருந்தா - டென்மார்க்

- தமிழ், முஸ்லீம், மலையக தமிழர் மீதான சிறிலங்கா அரசின் அடக்குமறைகள் பற்றி அதிகமாக எழுதியுள்ளீர்கள். இது சரியானதுதான். ஏனினும் சிறிலங்கா அரசினால் பல்வேறு வழிகளில் அடக்கப்படுகின்ற சிங்கள மக்கள் பற்றியோ அவர்கள் மத்தியில் செய்படுகின்ற முற்போக்கு மற்றும் இடது சாரி அமைப்புகள் பறிறியோ நீங்கள் எதுவித பார்வையையும வெளிப்படுத்தவல்லை. இத்தகைய போக்கு உங்கள் அரசியலை எதிர்கோடிக்கு கொண்டு சென்று விடும் என்பதை சுட்டிக்காட்ட விருமபுகின்றேன்.

  கமலநாதன் - கண்டி

- இன்று விடுதலைப்போராட்டத்தை முன்னெடுப்பவர்களாக விடுதலைபுலிகள் உள்ளனர். இவர்களே இன்றைய தமிழ்தேசத்தின் தேசிய சக்திகள் . இவர்களிடம் பல்வேறு பலவீனங்கள் இருப்பது மட்டுமல்ல, பல தவறுகளையம் கடந்த காலத்தில் இழைத்தும் வந்துள்ளனர். இருப்பினும் இவர்களை தவிர்த்து அல்லது புறமொதுக்கி இன்னுமொரு அரசியல் சக்தி விடுதலையை முன்னெடுப்பது சாத்தியமில்லை. அதுவும் தமிழீழ மக்கள் கட்சி விடுதலை புலிகள் என்றொரு சக்தி இருப்பதாக கருத்தில் கூட எடுக்காதது உங்கள் செயற்பாட்டை கேள்விக்குள்ளாக:குகிறது. ஏவ்விதமான தந்திரோபாங்கள் இருப்பினும் புலிகள் தொடர்பான உங்களின் நிலைப்பாட்டை தெளிவாகவும் உறுதியாகவும் மக்கள் முன்னிலையில் வைப்பது கட்டாயமானது தவிர்க்க முடியாதது என்பதை புரிந்து கொள்வீர்கள் என நம்புகின்றேன்.

  நவம்- ஜேர்மனி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# தமிழீழம்

## முடிவல்ல, முடிவின் தொடக்கம் !

'The Editor'
BM Box 4002
London. WC1N 3XX
United Kingdom


## ஆடிமாதம்.

பௌத்த-சிங்கள பேரினவாதத்தை மூடிப் போர்த்தியிருந்த அத்தனை திரைகளும் கழற்றி வீசப்பட்டு, அதன் உண்மை பண்புகள் அப்பட்டமாக வெளிப்பட்ட மாதம். வரலாற்றின் பல்வேறு காலப்பகுதிகளில் இடம்பெற்றது போன்ற, வெறித்தனமான இனஅழிப்புக்கு, உலகம் மீண்டும் ஒருமுறை சாட்சியாக அமைந்த மாதம். சிறீலங்கா அரசின் கீழ், இனியும் நாம் வாழ முடியாது என்பதை, சிந்திய எங்கள் குருதித்துளிகளும் பறிக்கப்பட்ட எமது உயிர்களும் இழக்கப்பட்ட எமது சொத்துக்களும் எமக்கு உரத்து சொன்ன மாதம்.

இந்த மாதம், எமது தேசத்தின் உயிரெழுச்சி மாதமாக நினைவு கூரப்படும். எமது அரசியல் வரலாற்றில், முன்னெப்பொழுதும் அனுபவித்திராத வெகுஜன கிளர்ச்சியும் அரசியல் உணர்வும் திரண்டெழுந்த மாதமாக இதை நாம் என்றென்றும் நினைவு கூர்வோம்.

எந்த நோக்கத்திற்காக இந்த இனஅழிப்பு நிகழ்த்தப்பட்டதோ, அதற்கு முற்றிலும் மாறான விளைவு இங்கு வேரூன்றியுள்ளது: எம்மை அழித்து, திகிலூட்டி, அடக்கி வைப்பதற்கு சிறீலங்கா அரசும் சிங்கள பேரினவாத சக்திகளும் மேற்கொண்ட அத்தனை முயற்சிகளும் கேலவமான முறையில் தோற்றுப் போயுள்ளன, சிறிலங்கா அரசின் ஆக்கிரமிப்பிலிருந்து முற்றான விடுதலையும் சுதந்திர தமிழீழ குடியரசை நிறுவுவதும் எமது தேசத்தின் அரசியல் நிகழ்ச்சி நிரலில் முதன்மையாக்கப்பட்டு விட்டன, எம்மீதான ஆக்கிரமிப்பு யுத்தத்தை, நாம் மிக உறுதியாக, மாபெரும் வலிவுடன் எதிர்த்து நிற்கிறோம், நீண்ட இருபது வருடங்களாக, சர்வதேச பிற்போக்கு சக்திகளின் ஆதரவுடன் சிறீலங்கா அரசு எம்மீது தொடுத்துள்ள யுத்தத்தில், நாம் வீரத்தின் விளைநிலமாக உரம் பெற்றிருக்கிறோம்.

நாம் ஒரு மாபெரும் அரசியல் வேள்வியை முன்னெடுத்திருக்கிறோம். இதை வெற்றிகரமாக நிறைவு செய்வதற்காக எம்மை அர்ப்பணித்திருக்கிறோம். சிறீலங்கா அரசினதும் அதன் சர்வதேச ஆதரவு சக்திகளினதும் அனைத்து தடைகளையும் கயமை நிறைந்த பிரச்சாரங்களையும் மீறி, இந்த அரசியல் வேள்வியை நாம் தீவிரமாக முன்கொண்டு செல்கிறோம். மீண்டும் மீண்டும் புதுப் பரிமாணம் எடுத்து, எம்மை அடக்க முயற்சிக்கும் சிங்கள பேரினவாத சக்திகளை எதிர்த்து வெல்லும் வலிமையை நாம் வெளிப்படுத்தியிருக்கிறோம். நீதியான போராட்டம் வெற்றி பெறும் என்று வரலாற்றில் எப்போதும் நிரூபிக்கப்பட்டு வந்திருப்பது போல், சுதந்திரத்திற்கான எமது போராட்டம் நிட்சயம் வெற்றி பெறும். அப்போது இந்த உலகம் மீண்டும் ஒருமுறை குலுக்கப்படும், தமது விடுதலைக்காக போராடிக் கொண்டிருக்கின்ற ஒவ்வொரு தேசமும் ஒவ்வொரு சமூகமும் மீணஸிடும் கிளர்ச்சி கொண்டெழும். விடுதலை பாதையில், எமது போராட்டம் புதிய அனுபவமாக பொறிக்கப்படும்.

நாம் மீண்டும் பிரதிக்ஞை செய்வோம்: சிங்கள பேரினவாத சக்திகளினால் பறிக்கப்பட்ட எமது தேசத்தின் ஒவ்வொரு உயிரையும் எமது குருதியில் கலப்போம் என்று, ஆக்கிரமிப்பாளர்களால் கொல்லப்பட்ட எம்தேசத்து மக்களை எம்கருவில் வளர்ப்போம் என்று, எம்குழந்தைகளை, எம்பெண்களை, எம் இளைஞர்களை, எம்முதியோரை கொன்றவர்களை நீதியின் முன் நிறுத்துவோம் என்று, எதற்காக எமது மக்களின் உயிர்கள் பறிக்கப்படுகின்றனவோ, அந்த சுதந்திர தமிழீழத்தை வென்றெடுப்போம் என்று!

............................

இந்த இதழுடன் தமிழீழ மக்கள் கட்சியின் அரசியல் திட்டமும் இணைக்கப்பட்டுள்ளது. தம்து கொள்கைகளை சுயஆய்வுகளின் அடிப்படையில், அரசியல் திட்டமாக வரைந்து அதன் வழிகாட்டலில் செயற்பட வேண்டியது ஒவ்வொரு அரசியல் கட்சிக்கும் அடிப்படை நிபந்தனையாகும். இவ்வாறான திட்டத்தின் மூலமே மக்களின் நலன்கள் எதிர்பார்ப்புகள் அரசியல் நோக்கங்கள்... என்பவை தெளிவாக அடையாளம் காணப்பட்டு சாரப்படுத்தப்பட முடியும். மேலும் போராட்டதில் முக்கிய திருப்பங்கள் நிகழும் போதெல்லாம், ஒவ்வொரு புரட்சிகர கட்சியும் தாம் கொண்டிருக்கின்ற அடிப்படை கொள்கைகளுக்கு முரணற்ற வகையில் முடிவுகளை எடுத்து செயற்படுவதும் சாத்தியமாகும். இத்தகைய அவசியத்தின் அடிப்படையில் தமிழீழ மக்கள் கட்சி வகுத்துள்ள திட்டம் மக்களின் மதிப்பீட்டிற்கு முன்வைக்கப்படுகின்றது.

புரட்சிகர வணக்கங்கள்.

ஆசிரியர் குழு.

15.07.1999.

## எழும் பேரினவாதிகள்... (9ஆம் பக்கத் தொடர்ச்சி)

மக்களிடையே ஊன்றப்படுகின்றது. (இத்தகைய பெருமித உணர்வு, ஆதிக்க உணர்வின் ஒரு வடிவமாக எளிதில் மாறக்கூடியது.)

3. தமிழ் இளைஞனின் ஆவேஷமும் இறுதியில் அவன் போராட்ட இயக்கத்தில் இணைவதும், தமிழ் இளைஞர்கள் குறித்த எதிரான, வன்மமான உணர்வை சிங்கள மக்களிடையே ஏற்படுத்துகின்றன. இவற்றோடு, யுத்தமுனையில் தமிழ் போராளிகளின் கொடூர நடவடிக்கைகளும், சிங்களபடையினரின் கருணைமிக்க மனிதாபிமான நடவடிக்கைகள்... போன்றவையும் இணையும்போது இந்த உணர்வு இன்னும் ஆழமாகின்றது.

4. சில சிங்கள அரசியல்வாதிகளினதும் படை அதிகாரிகளினதும் ஊழல்மிக்க நடவடிக்கைகளே, யுத்தத்தில் சிறீலங்கா இராணுவம் வெற்றி பெற முடியாமைக்கான காரணம் என்று காட்டுவதினூடாக இந்த யுத்தத்தில் படையினர் வெற்றிபெற முடியும் என்ற கருத்து சிங்கள மக்கள் மத்தியில் பரப்பப்படுகின்றது.

இவ்வாறான கருத்துக்கள் சிங்கள மக்கள் மத்தியில் தொடர்ச்சியாகவும் உணர்ச்சிமிக்க காட்சி படிமங்களுக்கூடாகவும் திணிக்கப்படுவதன் மூலம், அவர்களுக்குள் படிந்திருந்த குற்றவுணர்வு பெருமளவில் அகற்றப்பட்டு விட்டது. இங்கு நாம் தொலைக்காட்சி நாடகங்களை மட்டுமே பரிசீலித்திருக்கிறோம். இதுபோன்று, திரைப்படங்கள், அரங்க நாடகங்கள், தெருநாடகங்கள், பாடல்கள், கவிதைகள், சிறுகதைகள், வானொலி நிகழ்ச்சிகள், தொலைக்காட்சி உரையாடல்கள், யுத்தமுனை சார்ந்த விவரணங்கள், மேடைப்பேச்சுக்கள்.. என எங்கும் இத்தகைய கருத்துக்கள நிறைந்திருக்கின்றன என்பதை கவனத்தில் கொள்வோமாயின் சிங்களதேசத்தின் மத்தியில் இவை எத்தகைய வலிமையான தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றன என்பதை எளிதாக புரிந்து கொள்ள முடியும்.

83 இனஅழிப்புகள் நிகழ்த்தப்பட்டு இப்போது 16 வருடங்கள் கடந்து விட்டன. குற்றவுணர்வு அகற்றப்பட்டு விட்ட முன்னைய பிரிவினருடன், இந்நிகழ்வுடன் அறவே சம்பந்தப்பட்டிராத ஒரு புதிய, இளைய தலைமுறையினரும் இன்று சிங்களதேசத்தில் காணப்படுகின்றனர். 16 தொடக்கம் 26 வயதிற்கிடைப்பட்டோரான இவர்கள், சமூக, பொருளாதார, அரசியல் மற்றும் கலாச்சார காரணிகளினால் கடுமையாக பாதிக்கப்படுபவர்களாகவும் எளிதாக உணர்ச்சியூட்டப்பட கூடியவர்களாகவும் இருக்கிறார்கள். இவர்கள் அனைவரும், மீண்டும் பௌத்த-சிங்கள பேரினவாத சித்தாந்தத்தினால் கட்டுப்படுத்தப்படக்கூடிய நிலை உருவாகியுள்ளது. குற்றவுணர்வு அகன்று விட்ட அதேநேரத்தில், தம்மை பற்றிய பெருமித உணர்வும் ஊட்டப்பட்டிருக்கின்ற நிலையில், சிங்களமக்கள் மிக எளிதாக பேரினவாத சக்திகளின் ஆதிக்கத்திற்குட்பட கூடிய சூழல் ஏற்பட்டிருக்கின்றது.

இவ்வாறு, சிங்கள முற்போக்கு மற்றும் "புத்திஜீவிப்பிரிவினரால்" கருத்தியல் தளத்தில் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள், பௌத்த-சிங்கள பேரினவாத சக்திகளின் மீள்எழுச்சிக்கு வழிவகுத்திருப்பதை நாம் காண்கிறோம்.

கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாக, சிங்களதேசத்தின் மீதான தமது சித்தாந்த ஆதிக்கத்தில் தளர்வை கொண்டிருந்த பௌத்த-சிங்கள பேரினவாத சக்திகள் இப்போது மீண்டும் புதிய வலிவுடனும் புதிய பரிமானத்துடனும் தமது ஆதிக்கத்தை நிலைநாட்டி வருகிறார்கள். நூற்றாண்டுகளாக சிங்களமக்களுக்கு இழைக்கப்பட்டு வந்திருக்கின்ற கொடுமைகளையும் பாரபட்சங்களையும் குறித்து இப்போது இவர்கள் பேசத் தொடங்கியுள்ளார்கள். சிறீலங்கா அரசு முன்னெடுத்துள்ள யுத்தம் நியாயமானது என்றும் தமிழர்களுக்கு எத்தகைய உரிமைகளும் வழங்க கூடாது என்றும் இவர்கள் மிகத்தீவிரமாக கோஷமெழுப்பி வருகிறார்கள், பெரும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுகிறார்கள். இவர்களின் இத்தகைய கருத்துக்களும் ஆர்ப்பாட்டங்களும் சிங்கள மக்களின் ஆதரவையும் அக்கறையையும் பெற்றிருக்கின்றன. தமது அரசு, தமிழ்மக்களுக்கு அளவுக்கதிகமான உரிமைளை வழங்க தயாராக இருந்தும்கூட, அதை ஏற்று கொள்ளாமல், விடுதலைப்புலிகள் யுத்தத்தை தொடர்கிறார்கள் என்றும், புலிகளை யுத்தத்தில் தோற்கடித்தால்தான் சமாதானம் சாத்தியப்படும் என்றும் சிங்கள மக்கள் உறுதியாக நம்புகின்ற நிலை ஏற்பட்டிருக்கின்றது. இவ்வாறு, சிங்களமக்களில் பெரும்பாலானோர், இப்போது யுத்தத்தை ஆதரிப்பவர்களாகவும் அதில் நேரடியாகவும் மறைமுகமாகவும் பங்குகொள்ள கூடியவர்களாகவும் மாறிவருகிறார்கள்.

இவை அனைத்துமே வரவிருக்கின்ற மாதங்களில், எம்மீதான சிறீலங்கா அரசின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் மேலும் தீவிரப்படவிருப்பதை தெளிவாக சுட்டி காட்டுகின்றன. 16 வருடங்களுக்கு முன்னர், எம்மீது மேற்கொள்ளப்பட்ட இனஅழிப்பு நடவடிக்கைகள் எம்மை விறுகொண்டெழச்செய்தன. இப்போது 16 வருடங்களுக்கு பின்னர், சிறீலங்கா அரசும் பௌத்த-சிங்கள பேரினவாத சக்திகளும் முன்பைவிட தீவிரமாகவும் புதிய வியூகத்துடனும் எம்மீதான ஆக்கிரமிப்பை தொடர முனைந்துள்ளன. தேசிய அளவிலும் சர்வதேசரீதியிலும் இதற்கான ஆதரவை பெற்று வருகின்றன.

சிறிலங்காவின் அரசியல், சமூக தளங்களில் திரண்டு வருகின்ற இத்தகைய மாற்றங்களை நாம் தெளிவாக அடையாளம் காண வேண்டும். எம்மீது மேற்கொள்ளப்படவிருக்கின்ற புதிய ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை எதிர்த்து வெல்ல கூடிய வழிமுறைகளை நாம் கண்டுகொள்ள வேண்டும். எமது போராட்டத்தின் நியாயத்தை சர்வதேச அரங்கில் தெளிவாக நிலைநிறுத்துவதும் எமது தேசம் தழுவிய வலிமையான வெகுஜன அரசியல் இயக்கத்தை கட்டியெழுப்புவதும் இவற்றிற்கான உறுதியான அடித்தளமாக அமையும்.


லண்டன் தொடர்புகட்கு:
BM BOX 6769
LONDON WC1 3XX
TEL : 0704 137 2064.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்